இஸ்லாமிய

அடிப்படையில்

தோன்றிய தமிழ்க்

காப்பியங்கள்

1973 மே மாதம் 12 ஆம் 13 ஆந் திகதிகளில்
திருச்சி, ஜமால் முஹம்மத் கல்லூரியில் நடைபெற்ற
இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருத்தரங்கில்
வாசிக்கப்பட்டது.

அல்ஹாஜ் எம். எம். உவைஸ் எம். ஏ.
''மர்கஸி'' ஹேனமுல்லை, பாணந்துறை.
இலங்கை.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள்

காப்பியங்கள் தனிச்சிறப்புப் பொருந்தியவை. எந்த மொழியின் இலக்கியத்திலும் காப்பியங்கள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஒரு மொழியின் பழமை, அம் மொழியின் இலக்கியத்தரம், சொல்லாட்சியின் சிறப்பு, இலக்கிய நடை அழகு, அதன் ஊடாக ஊடுருவிப்பாயும் உணர்ச்சிப் பெருக்கு, கவிதை நயம், சொல்வளம்—இவை அத்தனையையும் பிரதிபலிப்பதாக அமைவது காப்பியம். இத்தகைய சிறப்பியல்புகள் அத்தனையையும் கொண்டு திகழும் மொழிகள் மிகச் சிலவே உலகில் உள்ளன. அத் தகைய சிறப்பு மிக்க மொழிகளுள் தமிழும் ஒன்று. தமிழ் மொழியில் உள்ளது போல் காப்பியங்கள் பெருமளவில் உள்ள வேறு ஒரு மொழியைக் குறிப்பிடுவது கடினம். உல கில் உள்ள எல்லா மதங்களையும் பற்றிய அடிப்படைக் கொள் கைகள் பாவிகவணி போன்று அமைந்துள்ள காப்பியங்களைத் தன்னிடத்தே கொண்டு விளங்குவது தமிழ்மொழி. எனவே தமிழ் எல்லா மதத்தவர்களாலும் போற்றப்படும் ஒரு பொதுமொழி. சைவம், வைணவம், பௌத்தம், சமணம், கிறித்தவம், இஸ்லாம் ஆகிய பல்வேறு மதங்களை அடிப்படை யாகக்கொண்டு தோன்றிய காப்பியங்கள் தமிழிலே உள்ளன. இப்பொழுது நாம் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களை எடுத்துக் கொள்வோம்.

•

உண்மையிலேயே சிறந்த தமிழ்க் காப்பியங்களின் சிறப் பியல்புகள் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் அமைந்துள்ளனவா? அவை எவ்வெவ்வகை யில் ஏனைய தமிழ்க் காப்பியங்களை ஒத்திருக்கின்றன? எவ் வெவ்வகைகளில் அவற்றிலிருந்து வேறு படுகின்றன.? இஸ்

லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க்காப்பியங்கள் இஸ்லாமிய கொள்கைகளுக்கு முரணாக உருவெடுத்துள்ளனவா? இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க்காப்பியங்கள், எவ்வெத்துறைகளால் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன? ஏனைய தமிழ்க்காப்பியங்களில் இல்லாத எத்தகைய தனிச்சிறப்பியல்புகள் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க்காப்பியங்களில் இடம் பெற்றுள்ளன. இன்னோரன்ன பல வினாக்களுக்கு விடை காண முயலல் மிக்க பயனுடைய தொன்றாகும்.

ஓர் இலக்கிய கோபுரத்தின் உச்சி மகுடமாகத் திகழ்வது காப்பியம் எனலாம். இங்கே சிற்பியாகிய கவிஞன் தன்னால் பெறக் கூடிய அனைத்தையும் உபயோகித்து அலங்காரமாகவும் கண்கவர்முறையிலும் இலக்கியக் கோபுரத்தைக்கட்டி எழுப்புகிறான். கவிஞன் தனது ஆக்கமுயற்சியில் எவ்வித குறையையும் வைக்க விரும்பமாட்டான். மற்றவர்கள் நிர்மாணிப்பதைக் காட்டிலும் சிறந்த ஒன்றை அமைக்கவே கவிஞன் முயலுகிறான். மற்றவர்கள் தன்னை மிஞ்சிவிடக்கூடாது என்றும் எண்ணுகிறான். எண்ணிக் கருமமாற்றுகிறான். தலைசிறந்த சிற்பியாகிய கவிஞன் இவற்றையே தனது குறிக்கோளாகவும் நோக்கமாகவும் கொள்கிறான்.

தமிழ மொழியிலே உள்ள காப்பியங்கள் பெருங்காப்பியம், காப்பியம், இதிகாசம், புராணம் என நான்கு விதமாக அழைக்கப்படும், பாரதமும் ராமாயணமும் இதிகாசங்கள். முதலில் பதினெட்டுப் புனிதக் கதைகளை மாத்திரம் குறிப்பிட்ட புராணம் என்னும் சொல் பின்னர் அடியார்களினதும் புனிதத் தலங்களினதும் வரலாறுகளைக் கூறுவதாக அமைந்தது.

•

இனி, காப்பியங்களின் சிறப்பியல்புகளைப் பார்ப்போம். காப்பியங்களில் இருக்க வேண்டிய சிறப்பியல்புகளைத் தண்டியலங்காரம் இவ்வாறு விவரிக்கிறது. வாழ்த்துதல், தெய்

வம் வணங்குதல், உரைக்கும் பொருளுணர்த்துதல் என்னும் மூன்றினுள் ஒன்று முதலில் அமைதல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நான்கினையும் பயக்கும் ஒழுகாறு உடைத்தாய் இருத்தல் வேண்டும். தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருவனை நாயகனாக— பாட்டுடைத் தலைவனாகக் காப்பியம் அமைதல் வேண்டும். மலைவருணனையும், கடல்வருணனையும் நாட்டுவருணனையும், நகரவருணனையும், இருதுவருணனையும், சூரியோதயவருணனையும், சந்திரோதயவருணனையும் என்றின்னோரன்னவருணனைகள் காப்பியத்தில் இடம் பெறல் வேண்டும். நன்மணம் புணர்தல், பொன்முடிகவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், சிறுவரைப் பெறுதல், புலவியற் புலத்தல், கல்வியற் களித்தல் என்னும் இன்னோரன்ன செய்கைச் சிறப்புப் புகழ்ந்து தொடுக்கப்பட்ட நல்லொழுக்க முடையதாய் அமைதல் வேண்டும். மந்திர மிருத்தல், தூது விடுதல் மேல் செலவு, செருச் செய்கை, வெற்றி பெறுதல் என்னும் இவையும் வருணிக்கப்படுதல் வேண்டும். காப்பியம் சருக்கம் என்றோ, இலம்பகம் என்றோ பரிச்சேதம் என்றோ பாகுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உவகை, பெருமிதம், அழுகை, வியப்பு, நகை, அச்சம், இளிவரல், வெகுளி என்னும எட்டுவகைப்பட்ட சுவையும் அங்கு இடம் பெறுதல் வேண்டும். உலகத்தாருள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தாருக்குப் புலப்படும் முறையில் மெய்ப்பாடு என்னும் பொருட்பாடு வெளிப்படுதல் வேண்டும். உவகை முதலிய சுவை உணர்வு பிறந்தவழி உண்டாகும் உள்ள நிகழ்ச்சி மெய்ப்பாட்டுக்குறி எனப்படும். அதனால் உடலில் தோன்றும் மயிர்சிலிர்த்தல், வியர்த்தல், கண்ணீரரும்பல், அசைவின்றி நிற்றல், நடுங்குதல், நிறம் வேறுபடுதல், குரல் மாறுதல் முதலியவையும் மெய்ப்பாடு எனப்படும். அறம் பொருள், இன்பம் வீடு என்னும் நான்கினுள் ஒன்றோஒன்றுக்கு மேற்பட்டனவோ குறையின் அது காப்பியம் எனக் கருதப்படும். சிறு காப்பியம் எனக் கணிக்கப்படும். தண்டியின் வடமொழி நூலில் உள்ளவற்றை விடக் குறைவாகவே தமிழ்த்தண்டியலங்காரத்தில் காப்பியத்தின் சிறப்

பியல்புகள் விவரிக்கப்பட்டுள்ளன என பேராசிரியர் வையா புரிப் பிள்ளை கூறியுள்ளார்.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங் களில் இப்பொழுது கூறப்பட்ட சிறப்பியல்புகள் எவ்வாறு அமையப்பெற்றன என்பதைப்பற்றி அறிய முற்படுமுன், இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்கள் எவை என்பதனை அறிய முயல்வோம்.

காப்பியம் என்று கூறும் பொழுது சீறாப் புராணமே எமது மனக்கண்முன் தோன்றுகிறது. இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் மிக பிரசித்தி பெற்ற தும் இதுவே. எட்டையபுர சமஸ்தான வித்துவான் உமறுப் புலவர் அவர்களால் இயற்றப்பட்டது சீறாப் புராணம். சீறத் என்னும் அறபுச் சொல்லும் புராணம் என்னும் தமிழ்ச் சொல்லும் சேர்ந்தே சீறாப் புராணம் என்னும் சொற்றொடர் தோன்றியது. சீறத் என்னும் சொல்லிருந்து மருவிய சீறா என்னும் சொல்லின் பொருள் வாழ்க்கை வரலாறு என்பதாகும். சீறாப்புராணம் நபிகள் நாயகம் (ஸல்) அவர் களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டுள்ளது

விலாதத்துக் காண்டம், நுபுவத்துக்காண்டம், ஹிஜ்றத் துக் காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளாகச் சீறாப் புராணம் பிரிக்கப்பட்டுள்ளது. விலாதத்துக் காண்டம் பெருமானார் அவர்களின் பிறப்பையும் இளமையையும் நுபுவத்துக்காண்டம் நபித்துவம்கிடைத்ததிலிருந்துள்ள சம்ப வங்களையும் ஹிஜ்றத்துக்காண்டம் மக்க மாநகரி லிருந்து மதீன மாநகரம் வரை சென்றதிலிருந்து உறணி கூட்டத்தார் படலம் வரையும் உள்ள நிகழ்ச்சிகளையும் விவ ரிக்கின்றன. இம் மூன்று காண்டங்களிலும் தொண்ணூற் றொரு படலங்கள் இடம் பெற்றுள்ளன. சீறாப் புராணத்தி லுள்ள செய்யுட்களின் மொத்த எண்ணிக்கை ஐயாயிரத் திருபத்தாறு ஆகும்.

சீருப் புராணம் என்னும் பெயருடன் இயற்றப்பட்டுள்ள மற்றொரு காப்பியம் தோன்றியுள்ளது. இது பொது வாக சின்ன சீறு என அழைக்கப்படுகிறது. உமறுப்புலவர் தமது சீருப் புராணத்தில் விட்ட இடத்திலிருந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை சின்ன சீறுவில் வருணிக்கப் பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வபாத்து வரை சின்ன சீறுவில் விவரிக்கப்பட்டுள்ளது.

சின்ன சீறு என்னும் காப்பியத்தைக் காயற்பட்டணத் தைச் சேர்ந்த பனீ அகுமது மரைக்காயர் புலவர் அவர்கள் இயற்றியுள்ளார். இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்ட பெரு மை இலங்கையைச் சாரும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரும் பரிகாரி மரைக்காயர் என்று அழைக்கப்பட்டவருமாகிய பக்கீர் முகியித்தீன் என்பவராலேயே இந்நூல் பதிப்பிக்ப்ட்டு வெளி யிடப்பட்டுள்ளது. இவர் யாழ்ப்பாணத்து உதுமாலெவ்வை அவர்களின் புதல்வராவார். சின்ன சீறு ஹிஜ்றி 1272 இல் அதாவது கி. பி. 1855 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது மஹோ மஹோ பாத்தியாயரும் தமிழ்த் தாத்தாவுமான டாக்டர் ஊ. வெ. சாமிநாத ஐயர் பிறந்த ஆண்டு. இலங்கை யில் பண்டைய தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப் பித்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை. 1857 ஆம் ஆண்டு தான் தாமோதிரம் பிள்ளை அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார்கள். அதற்கு முந்தியே ஈழத்து முஸ்லிம்களின் தமிழ்ப் பணி ஆரம்பமா யிற்று என்று கூறுவதில் பெருமிதம் அடைகிறேன். சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் 1868 ஆம் ஆண்டில் தொல் காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையத்தை வெளி யிட் டார் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. சின்ன சீறுவில் முப்பத்தொன்பது படலங்கள் உள்ளன. செய்யுட்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து எண்ணூற்று இருபத் தொன்பதாகும்.

நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை யின் இறுதிப் பகுதியைக் கொண்டு ஆரம்பிக்கிறது புது

குஷ்ஷாம் என்னும் மற்றொரு காப்பியம். புதுகுஷ்ஷாம் என்ற சொற்றொடரும் புதுஹ், ஷாம் என்னும் இரண்டு அறபுச் சொற்களாலாயது. புதுண என்றால் வெற்றி என்பது பொருள். ஷாம் என்னும் அறபுச் சொல் இடது பக்கத்தில் இருப்பதொன்றை குறிக்கின்றது. மக்காவில் இருந்து சூரியன் உதயமாகும் திசையை நோக்கும் ஒருவனின் இடது கைப்புறத்தில் உள்ள ஒன்றையே ஷாம் என்னும் சொல் குறிக்கின்றது. அவ்வாறு உள்ளது ஷாம் என்னும் நாடு. இக்கால சிரியா நாடே அறபில் ஷாம் என வழங்கப்பட்டது. எனவே புதுஹுஷ்ஷாம் என்பது முஸ்லிம்களின் சிறிய நாட்டு வெற்றிப் பிரவேசத்தையே குறிக்கின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் இறுதிப் பகுதியையும் இஸ்லாத்தின் முதலாவது கலிபாவான அபூ பக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தையும் இரண்டாவது கலீபாவான உமறே பாறூக் (றலி) அவர்களின் ஆட்சிக் காலத்தையும் புதுகுஷ்ஷாம் வருணிக்கிறது. இம்மூன்று பகுதிகளும் முறையே காண்டம் முகம்மதிய்யா, காண்டம் சித்திகிய்யா, காண்டம் பாறூக்கிய்யா என அழைக்கப்பட்டுள்ளன. காண்டம் முஹம்மதிய்யா எம் பெருமானார் (ஸல்) அவர்கள் அயல் நாட்டு மன்னர்களை இஸ்லாத்துக் அழைத்து அனுப்பிய நிருபங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மற்ற இரண்டு பகுதிகளும் சிரியாவில் நடைபெற்ற போர்களையும் இறுதியில் சிரியா வெற்றி கொள்ளப்பட்டமுறையையும் குறிப்பிடுகின்றன. புதுகுஷ்ஷாம் அறுபத்தொரு படலங்களையும் ஆறாயிரத்து எழுநூற்று எண்பத்தேழு செய்யுட்களையும் தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது.

புதுகுஷ்ஷாம் காப்பியத்தின் ஆசிரியர் புகழ்பெற்ற சேகுனுப் புலவர் அவர்களாவார். செய்கு அப்துல் காதிரு நயினார் லெப்பை ஆலிம் புலவர் என்பது அவர் தம் பெயர். புலவர் நாயகம் என்றும் அழைக்கப்படுகிறார். காயற்பட்டணத்தைச் சேர்ந்தவர். ஆசிரியர் தமது காப்பியத்தை

புதுகுஷ்ஷாம் என்கின்ற புராணம் எனப் பெயரிட்டு அழைக்கிறார்.

வேறு காப்பியங்களையும் சேகுனாப்புலவர் அவர்கள் இயற்றியுள்ளார்கள். அவற்றுள் ஒன்று திருமணிமாலை. நபி இப்றுகீம் (அலை) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டுள்ளது திருமணி மாலை. நபி இபுறுகீம் கலீலுல்லாஹ் அவர்களுடைய இயற்கையுஞ் செயற்கையுமாகிய நிகழ்ச்சிகளை வருணிக்கிறது திருமணி மாலை. இக்காப்பியத்தைச் செயற்கையங் காண்டம் இயற்கையங் காண்டம் என இரண்டு பிரிவுகளாக ஆசிரியர் பாடியிருத்தல் வேண்டும். அச்சியற்றப்பட்டுள்ள திருமணிமாலை முதலாவது செயற்கையங்காண்டம் என்று ஆரம்பித்து முடிவடைகிறது. திருமணி மாலையைப் பதிப்பித்தவர்களும் 'திருமணிமாலை புலவரவர்கள் பாடிய அளவுக்கு முற்றிற்று' என்று படல அட்டவணையின் கடைசியிலும நூலின் முடிவிலும் குறிப்பிட்டுள்ளனர். திருமணிமாலையில் முப்பத்தொரு படலங்கள் இடம் பெற்றுள்ளன. அப்படலங்களில் ஆயிரத்துத் தொளாயிரத்து ஒன்பது திருவிருத்தங்கள் அமைந்துள்ளன.

புலவர் நாயகம் அவர்களின் மற்ருெரு காப்பியம் குத்பு நாயகம். இக்காப்பியம் இஸ்லாத்துக்குப் புத்துயிர் அளித்த முகியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (றலி) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. இரண்டு காண்டங்களைக் கொண்டு குத்புநாயகத்தில் இருபத்தெட்டுப் படலங்களும் ஆயிரத்து முன்னூறு திருவிருத்தங்களும் இடம் பெற்றுள்ளன.

சேகுனாப் புலவரின் நான்காவது காப்பியம் திருக்காரணப் புராணம் ஆகும். நாகூர்பதியில் சமாதியுற்றிலங்கும் சாகுல் கமீது ஆண்டகையைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டது திருக்காரணப் புராணம். இக்காப்பியம் மூன்று காண்டங்களைக் கொண்டது. மாணிக்கப்பூர்க்காண்டம், பிறதேயச் சஞ்சாரக்காண்டம், நாகூர்க் காண்டம் என்று அக்

காண்டங்கள் மூன்றும் பெயரிடப்பட்டுள்ளன. ஐம்பத்தாறு படலங்களும் இரண்டாயிரத்து ஐந்நூற் றறுபத்து நான்கு திருவிருத்தங்களும் திருக்காரணப் புராணத்தில் இடம் பெற்றுள்ளன.

அடுத்து வண்ணக்களஞ்சியப் புலவரின் காப்பியங்களை எடுத்துக் கொள்வோம். வண்ணக்களஞ்சியப் புலவர் மீசல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். மதுரையில் உள்ள ஓர் ஊர் மீசல். இவருடைய இயற் பெயர் முகம்மது இபுறுஹீம் என்பதாகும். இவர் மூன்று காப்பியங்களை இயற்றியுள்ளார். ஒன்று இராஜநாயகம். அரசர்க்கு அரசரான சுலைமான் நபி (அலை) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது இராஜநாயகம். இக்காப்பியத்தில் நாற்பத்தாறு படலங்கள் உள்ளன. இரண்டாயிரத்துஇருநூற்று நாற்பது திருவிருத்தங்கள் இடம் பெற்றுள்ளன.

வண்ணக்களஞ்சியப் புலவர் அவர்களால் இயற்றப்பட்ட மற்றொரு காப்பியம் குத்பு நாயகம். இது முகியித்தீன் புராணம் என்றும் அழைக்கப்படுகிறது. முகியித்தீன் ஆண்டகை அவர்களைப் பாட்டுடைத்தலைவராகத் கொண்டு பாடப்பட்டது இந்நூல். முப்பத்தெட்டு படலங்களும் ஆயிரத்து எழுநூற்று ஏழு திருவிருத்தங்களும் இந்தக்குத்பு நாயகத்தில் இடம் பெற்றுள்ளன.

தீன் விளக்கம் என்னும் காப்பியத்தையும் வண்ணக்களஞ்சியப் புலவரே இயற்றியுள்ளார். இக்காப்பியத்தின் பெயர் தீன் விளக்கம் என்றிருப்பதால் இது தீனுல் இஸ்லாத்தைப் பற்றியதாக அமைந்துள்ளது. அறபு நாட்டு மதீனமாநகரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தமிழ் நாட்டில் மதுரையில் குடியேறிய செய்யது இபுறுகீம் சாஹிப் அவர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து இஸ்லாமிய கோட்பாடுகளை விளக்குவதாக அமைந்துள்ளது தீன் விளக்கம் என்னும் காப்பியம். தீன் விளக்கம் என்னும் காப்பியத்தில் இருபத்தி

ரண்டு படலங்களும் ஆயிரத்து எழுநூற்றுப் பதினன்கு திரு விருத்தங்களும் அமைந்துள்ளன.

ஒன்றுக்கு மேற்பட்ட காப்பியங்களை இயற்றிய பெருமைக் குரிய மற்ெறாரு புலவர் குலாம் காதிறு நாவலர் அவர்களா வார். இவர் நாகூர் தறுகா வித்துவானகச் சிறந்து விளங்கி யவர். நான்காம் தமிழ்ச்சங்கத்து நக்கீரர் என்று புகழப் பெற்றவர். இவருடைய காப்பியங்களிலே தமிழ்ச்சங்க காலத் துக்குரிய சொல்லாட்சியும் உவமை நயமும் இயற்கை வருணை னையும் இடம் பெற்றிருத்தலே இவரது சிறந்த ஆற்றலை உலகுக்கு எடுத்து இயம்பிக்கொண்டிருக்கின்றன.

குலாம் காதிறு நாவலர் அவர்கள் நாகூர்ப் புராணத்தை இயற்றியுள்ளார். நாகை ஆண்டகை எனப் புகழப்படும் சாகுல் கமீது ஆண்டகை சமாதியுற்றுத் திகழும் நாகூரின் முக்கியத்துவத்தை வருணிப்பதாக அமைந்துள்ளது நாகூர்ப் புராணம். முப்பது படலங்களையும் ஆயிரத்து முன்னூற் றைம்பது திருவிருத்தங்களையும் கொண்டு திகழ்கிறது நாகூர்ப் புராணம்.

வா. குலாம் காதிறு நாவலர் அவர்களின் மற்ெறாரு காப்பியம் ஆரிபு நாயகம். ஆரிபீன்களுக்கெல்லாம் அரசரான சுல்தானுல் ஆரிபுன் செய்யது அகமது கபீர் (றஹ்) அவர் களைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டது ஆரிபு நாயகம் என்னும் காப்பியம். செய்யது அகமது கபீருர் ரிபாயி (றஹ்) அவர்கள் இருக் நாட்டைச் சேர்ந்த பதாயிகுப்பகுதியைச் சேர்ந்தவர். தவநிலைக்காண்டம், நவநிலைக்காண்டம் என இரண்டு காண்டங்களாக ஆரிபு நாயகம் பிரிக்கப்பட்டுள்ளது. நாற்பத்துமூன்று படலங்களைக்கொண்ட ஆரிபு நாயகத்தில் இரண்டாயிரத்து முன்னூற்றி எழுபத்து மூன்று திருவிருத் தங்கள் இடம் பெற்றுள்ளன. இக்காப்பியத்துக்குப் புரவ லராகக் கருமமாற்றி வாழ்ந்தவர் யாழ்ப்பாணத்துப் பாக்கி யப்பா என்று வழங்கப்பட்ட முகம்மது லெப்பை மரைக்கா யன் என்பவர் ஆவார்.

ஈழத்திருநாடும் இத்துறையில் பணிபுரிந்துள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட புலவர்கள் அனைவரும் தமிழகத்தையே சேர்ந்தவர்களாவர். ஆனால் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு புலவரும் ஒரு காப்பியத்தை இயற்றித்தந்துள்ளார். அந்தப் புலவரின் பெயர் பதுறுத்தீன் புலவர். இவர் மகா வித்துவான். இவரைப்பற்றிய வேறு விவரங்கள் தெரியவில்லை. இவரும் முகியித்தீன் ஆண்டகை அவர்களையே பாட்டுடைத்தலைவராகக் கொண்டு முகியித்தீன் புராணம் என்னும் காப்பியத்தை இயற்றியுள்ளார். பதுறுத்தீன் புலவரை ஆதரித்துப் பொருளுதவி வழங்கியவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரேயாவார். உசைன் நயினார் என்பவரின் புதல்வர் செய்கு மீரான் என்பவரே இங்கு குறிப்பிடப்பட்ட புரவலராவார். இக்காப்பியத்தில் ஆளப்பட்டுள்ள பலசொற்கள் யாழ்ப்பாண வழக்குக்கே உரிய சொற்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. பதுறுத்தீன் புலவரால் இயற்றப்பட்ட முகியித்தீன் புராணம் இரண்டு பாகங்களைக் கொண்டது. இரண்டு பாகங்களும் வெவ்வேறாக அச்சியற்றப்பட்டுள்ளன. முதலாம் பாகத்தில் நாற்பது படலங்களும் இரண்டாம் பாகத்தில் முப்பத்து நான்கு படலங்களும் இடம் பெற்றுள்ளன. நாலாயிரம் திருவிருத்தங்கள் இந்த முகியித்தீன் என்னும் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. இதன் பரிசோதனைக் கர்த்தாவாக கோட்டாறு கா. ப. செய்குத் தம்பிப் பாவலர் அவர்களின் பெயர் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. சிறப்புப்பாயிரத்தில் பாவலர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இமாம் ஹுசைன் (றலி) அவர்களைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அவர்களின் சரித்திரப் புராணமாகிய கனகாபிஷேகமாலையும் சல்கா என்னும் பெண் போர் புரிந்து இஸ்லாத்திற்கு வெற்றி ஈட்டிக் கொடுத்த நிகழ்ச்சியை மையமாக வைத்து சல்கா படைப்போர் என்று வழங்கும் இறவுசுல்கூல் படைப்போரும் காப்பிய இலக்கணங்களுக்கமைய பாடப்பட்ட இரு நூல்களாகும். கனகாபிஷேக மாலையைக் கனக

விராஜரும் இறவுசுல்கூல் படைப்போரை குஞ்சுமூசு லெப்பை ஹாஜி ஆலிம் புலவரவர்களும் பாடியுள்ளனர். கனகாபிஷேக மாலையில் முப்பத்தைந்து படலங்களும் மூவாயிரம் திருவிருத்தங்களும் இடம் பெற்றுள்ளன. இறவுசுல்கூல் படைப்போரில் நாற்பத்தைந்து படலங்களும் இரண்டாயிரத்து முன்னூற்று எழுபத்து மூன்று திருவிருத்தங்களும் இடம் பெற்றுள்ளன.

இனி, காப்பியங்களின் முதலாவது சிறப்பியல்பினை எடுத்துக்கொள்வோம். வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல் உரைக்கும் பொருள் உணர்த்துதல் என்னும் மூன்றும் அல்லது இவற்றுள் ஏதாவது ஒன்றும் காப்பியத்திற்கு முதலில் வருதல் வேண்டும். எமது நோக்கம் இவை அனைத்தும் அல்லது இவற்றுள் ஒன்று இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அலசிஆராய்வதேயாகும். ஆனல்அவ்வாறு செய்வதற்கு முன்னர் தமிழ் மொழியில் தோன்றிய ஏனைய காப்பியங்களில் இந்தச் சிறப்பியல்பு எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் உரைபெறுகட்டுரைக்குப் பின்னர் மங்களவாழ்த்துப்பாடல் முதலில் அமைந்துள்ளது. திங்களையும் ஞாயிறையும் மழையையும் பூம்புகாரையும் போற்றிப் புகார்க்காண்டம் ஆரம்பமாகிறது. தமிழ் மொழியில் தோன்றிய, காப்பிய இலக்கணங்கள் அனைத்தும் ஒருங்கே அமைந்த முதலாவது பாரகாவியமான சீவசிந்தாமணியில் கடவுள் வாழ்த்து அமைந்துள்ள முறையைப் பார்ப்போம். சமண சமயத் ல் அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்ம சரணம் என்னும் நான்கு உண்டு. அருகசரணம். முதலில் கூறப்பட வேண்டியது. ஆனல் திருத்தக்கதேவர் தமது பெருங் காப்பியமாகிய சீவக சிந்தாமணியில் சித்தசரணத்தை முதலில் குறிப்பிடுகிருர். சித்தசரணம் என்பது சித்தனை வணங்கும் வணக்கம். இரண்டாவது கடவுள் வாழ்த்துச் செய்யுளில் அருகசரணத்தைக் குறிப்பிடுகிருர்.. மூன்ருவது

திருவிருத்தத்தில் தன்ம சரணமும் சாது சரணமும் கூறப் பட்டுள்ளது. அடுத்து அவையடக்கம் கூறுகிறுர் திருத்தக்க தேவர்.

கம்பரும் தமது இராமாயணத்தில் விஷ்ணுவுக்கே முத லிடம் அளித்துள்ளார் என்று கூறப்படுகிறது. கடவுள் வாழ்த்தில் உள்ள முதலாம் செய்யுளில் ஒரு கடவுளையும் கம்பர் இயற்கைப் பெயரால் சுட்டிக் கூறவில்லை. சுட்டுப் பெய ர்ச் சொல்லாலே குறிப்பிட்டுள்ளார். 'அவர்' என்றே குறிப் பிட்டுள்ளார். அடுத்த பாடலில் விட்டுணுவே முழுமுதற் கடவுள் என்று குறிப்பாகப் புலப்படும் படி குறிப்பிடுகிறுர். கடவுள் வாழ்த்தில் உள்ள இறுதிப்பாடலில் 'அரி' என்று விட்டுணுவை வெளிப்படையாகக் கூறுகிறுர்.

பெரிய புராணம் என்று வழங்குகிற திருத் தொண்டர் புராணத்தில் உள்ள பாயிரமே, அதன் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. 'அம்பலடுத்தாவான்', 'தில்லையுண்மா நடஞ்செய்வரதர்' என்று சிவ பெருமானையே சேக்கிழார் சுவாமிகள் முதலில் புகழ்கிறுர். அடுத்து விநாயகக்கடவுள் புகழப்படுகிறுர். அதைத் தொடர்ந்து அடியார்களைத் துதிக்கி றுர். திருவிளையாடற் புராணத்தில் உள்ள காப்புச் செய்யு ளில் விநாயகக் கடவுளே வழிபடு கடவுளாக அமைந்துள்ளார். கடவுள் வாழ்த்தில் சிவம், சக்தி, முதலிய பல தெய்வங்கள் புகழப்படுகின்றன.

தமிழ் மொழியிலே தோன்றிய ஏனைய காப்பியங்களில் கடவுள் வாழ்த்து எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப் பார்த்தோம். இனி, இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் கடவுள் வாழ்த்து எவ்வாறு அமைந் துள்ளது என்பதை ஆராய்வோம்.

பிஸ்மில்லாஹிறஹிமானிறஹீம் என்றே நாம் எதையும் ஆரம்பிக்கிறேம். அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன் புடையோனுமாகிய அல்லாஹ்வின் பேராலே நாம் எதையும்

ஆரம்பிக்கிறோம். இறை அருட்கவிமணி பேராசிரியர் அப்துல் கபூர் அவர்களின் கவிதையால் கூறுவதென்றால்

அலகிலா அருளும் அளவிலா அன்பும்
இலகுமோ ரிறையின் இனியபேர் போற்றி

என்று தான் ஆரம்பிக்கிறோம். இனி இந்த அடிப்படைக் கொள்கை மீறுமல் முஸ்லிம் புலவர் தத்தம் காப்பியங்களில் கடவுள் வாழ்த்தினை எவ்வாறு அமைத்துள்ளார்கள் என்பதைப் பார்ப்போம்.

முஸ்லிம் புலவர்கள் இஸ்லாமிய வரம்புக்குக் கட்டுப்பட்டவர்களாகவே கவிதை இயற்ற வேண்டியவர்களாக இருந்தனர். கடவுள் வாழ்த்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம் புலவர்கள் அதிக கவனமுடையவர்களாய் இருக்க வேண்டியவர்களாய் இருந்தனர். பிரபந்த முறைகளையும் ஏனைய வருணனைகளையும் பொறுத்தவரையில் ஏற்கனவே இருந்த பிரபந்த வகைகளையும் வருணனைமுறைகளையும் பின்பற்றிய முஸ்லிம் புலவர்கள் தமது காப்பியங்களில் சில சமயங்களில் மரபை மீற வேண்டியவர்களாய் இருந்தனர். முஸ்லிம் புலவர்கள் கடவுள் வாழ்த்தைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட முறையைப்பின்பற்றி வந்துள்ளனர். ஓர் ஒழுங்கு முறையை நடைமுறைப்படுத்தி வந்து உள்ளனர்.

கடவுள் வாழ்த்தில் அல்லது பாயிரத்தில் முதலில் அல்லாஹ்வையும் அடுத்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அடுத்து நான்கு கலிபாக்களையும்—அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்களையும் உமர் கத்தாப் (றலி) அவர்களையும் உதுமான் இப்னு அப்பான் (றலி) அவர்களையும் அலி இப்னு அபீதாலிப் (றலி) அவர்களையும் இதே ஒழுங்கு முறையில் புகழ்ந்து பாடுகின்றனர். அதனை அடுத்து நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்களின் பேரரான இமாம் ஹஸன் (றலி) அவர்களும் இமாம் ஹுசைன் (றலி) அவர்களும் போற்றப்படுகிறுர்கள்.

பின்னர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (றலி) அவர்கள் புகழப்படுகிறார்கள். அதைத்தொடர்ந்து பெரியோர்களாகிய மஷாயிகுமார்கள் புகழப்படுகிறார்கள். பின்னர் பொருளுதவி புரிந்த புரவலர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். கடைசியாக முத்திரைக்கவி இடம் பெறுகிறது. கடவுள் வாழ்த்துக்கு முன்னர் ஒவ்வொரு காப்பியத்திலும் காப்புச்செய்யுள் அல்லாஹ்வின் பாதுகாப்பை நாடிப் பாடப்படுகிறது. இனி, இவை அமைந்துள்ள முறையினை நோக்குவோம்.

முதலில் சீறாப் புராணத்தை எடுத்துக் கொள்வோம். இங்கும் ஒரு காப்புச் செய்யுள் இடம் பெற்றுள்ளது. அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பஞ் செய்கிறேன் என்பது போல் இச்செய்யுள் அமைந்துள்ளது. 'சிறப்பினையுடைய பொருள்; கருத்நால் உணரும் உருவமாய் உள்ளது; அறிவால் தெளிவு பெற்றவிடத்தும் இத்தன்மைத் தென நினைக்கமுடியாத உருவமற்றதன்மையே உருவமாயது; வெளி உருவு இல்லாத உள்ளுருவாயது; அகத்தின் கண்ணும் புறத்தின் கண்ணும் தன்னியலே யன்றிப் பிறவியலில்லாதது; அளவை யுளடங்காதது; பேரின்பத்தாலாயது; ஒப்பற்ற உருவமாயது; இல்லாமையிலிருந்து உள்ளதாந் தன்மையைத் தோன்றச் செய்த பேரொளியாயது; உயர்ந்த காவற்பாட்டினை உடையதாகிய ஆதிநாயனை—அல்லாஹுத்தஆலாவை நாம் வணங்கி உள்ளத்தில் நினைத்திருப்போம். இக்கருத்துக்களே காப்புச்செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளது.

திருவுருவா யுணருருவா யறிவின்றெடு
  தெளிவிடத்துஞ் சிந்தியாத
வருவுருவா யுருவுருவா யகம்புறமுந்
  தன்னியலா லடங்கா வின்பத்
தெருளுருவா யின்மையினி னுண்மையினைத்
  தோற்றுவிக்கு மொளியா யாவு
மருவுருவாய் வளர்காவன் முதலவனைப்
  பணிந்துள்ளி வாழ்த்துவாமே

காப்புப்பாடலைத் தொடர்ந்து கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்திலே முதல் நான்கு பாடல்களில் அல்லாஹ்வின் புகழ் பாடப்படுகிறது., அடுத்த இரண்டு பாடல்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அவற்றையடுத்து வரும் ஒவ்வொரு செய்யுளிலும் முறையே முறுசலான நபிமார்களையும் ஒருலட்சத்து இருபத்து நாலாயிர நபிமார்களையும் அபூபக்கர் (றலி) அவர்களையும் உமறு கத்தாப் (றலி) அவர்களையும் உதுமான் இப்னு அப்பான் (றலி) அவர்களையும் அலிஇப்னு அபீதாலிப் (றலி) அவர்களையும் அசன், உசைன் (றலி) இருவரையும் அஷ்ஹருல் முபஷ்ஷிறீன் என வழங்கும் நன்மாராயம் பெற்ற அசுகாபித் தோழர் பதின்மரையும் நான்கு இமாம்களையும் முகியித்தீன் ஆண்டவரையும், சதகத்துல்லா அப்பாவையும், உமறுப்புலவர் பாடியுள்ளார். கடவுள் வாழ்த்திலுள்ள கடைசி மூன்று செய்யுட்களிலும் செந்தமிழ்ப் புலவர்களைத்தாம் பாடுவதாகக் குறிப்பிட்டுள்ளார். ஏனைய புலவர்களும் ஏறத்தாழ இதே முறையையே பின்பற்றியுள்ளனர். சிலர் பெரியார்கள் சிலரைப் புகுத்தியிருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவற்றை நோக்குவோம்.

இனி ஏனைய காப்பியங்களில் இடம் பெற்ற காப்புச் செய்யுட்களை எடுத்துக் கொள்வோம். பனீ அகுமது மரைக்காயர் புலவர் தமது சின்ன சீறாவில் இவ்வாறு காப்புச் செய்யுளை அமைத்துள்ளார். அல்லாஹ்வின் தன்மைகளையே அவர் இவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார்.

உண்மையா யுணர்வாயவ் வொளியாயவ்
வொளிக்குவொளி யாயெங்கும்
அண்மையாய்ச் சேய்மையதா யருமையா
யெளிமையதா யகிலந்தானுய்
பெண்மையுமாண் மையுமலியுமல் லாதாயெல்
லாமாய்ப்பே சற்கொண்ணுத்
தண்மையா யெங்குநிறை பரம்பொருளா
கியபதியைத் தாழ்ந்து வாழ்வாம்.

செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள் தமது புதுகுச்சாம் என்கிற புராணத்தில் அல்லாஹ்வின் துணையை நாடி காப்புச் செய்யுளை இவ்வாறு பாடியுள்ளார்.

பூமேவு மருவெனவு முறைமேவு பொருளெனவும்
பொருந்து முண்மை
நாமேவு சுவை போலப் பொறிமேவியு
லகனைத் துநடத்துங் கோன்மை
மாமேவு மிறையருளே யெவ்வினைக்கு
மெவ்வுயிர்க்கு மருவி மாறு
தாமேவு பலபயனுங் கொடுத்தளிக்கு
மெக்காலு மன்புகூர்ந்தே.

சேகுனாப்புலவரின் திருமணிமாலையில் உள்ள காப்பு விருத்தம் இவ்வாறு அமைந்துள்ளது.

உலகமும் பரமும் பன்மையுயிர்களுந் தகைய பண்பும்
அலகிலா வினையும் பேறு மவையவை பெற்று நாளுங்
கலகமே யின்றி வாழ்த்துங் கணித்திடா வல்ல நாய
னலனுறுந் தொழிலின் மேன்மை நாடிய காப்புத் தானே.

அதே ஆசிரியரின் குத்பு நாயகத்தில் காப்பு வெண்பா இவ்வாறு அமைந்துள்ளது.

பூவாச மாநபிக்குப் பூர்வகலைக் யானபெல்லாம்
நீவாச மாயளித்த நேசனே— நாவாச
ஆரணத்தி னுட்பொருளே யாதிமுடி வில்லானே
காரணத்தின் காரணனே காப்பு.

புலவர் நாயகத்தின் திருக்காரணப் புராணத்தில் உள்ள காப்பு:

கார்மேவுஞ் சலத்தன்மை யொடுகருவி
பலவாலுங் கலந்து வண்மைப்
பேர்மேவும் பல்லுயிர்கள் படைத்தளிக்கும்
வல்லபத்தின் பெருமை பூண்ட
சீர்மேவு நாதனென வளவறுக்கா
வாநந்தச் செவ்விபூத்துப்
பார்மேவும் புகழோடு முலவாநிற்
பரன்காவல் பரிவிற் செய்வான்.

என அமைந்துள்ளது. இங்கே பார்மேவும் என்பதற்கு பூமியிடத்தில் நாம் அவனை மேவ நிற்போம் எனத் தன்மைய முற்றுக்கிக்கொள்ளவேண்டும். பரிவிற் செய்வான் என்பதனை காவல்செய்யும் பொருட்டு எனப் பொருள் கொள்ளல் வேண்டும். எனவே காவல் செய்யும் பொருட்டு நாம் மேவு வோம் என்று கொள்ளுதல் வேண்டும்.

மதுரை மீசல் வண்ணக்களஞ்சியப் புலவர் என்னும் முகம் மது இபுறுகீம் புலவர் என்பவருடைய குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தில் காப்புச் செய்யுளில் அல்லாஹ் விடம் காவல் தேடும் அதே சமயத்தில் நாம் காவல் தேடு வதன் காரணத்தையும் குறிப்பிடுகிறார். முகியித்தீன் புரா ணத்தை இயற்ற உதவி செய்வாய் ஆண்டவா என இவ்வாறு பாடுகிறார்.

கானபினைக் கீடளித்த காத்திமுற் றசூல்பேரர்
மோனமுகி யித்தீன் முதிர்சரிதை— யானயங்கூர்ந்
தெண்மையறப் பாடிடுதற் கெண்ணரிய பல்லுயிர்மேற்
கண்மைவைத் தாள்பவனே காப்பு.

நாகூர் மகா வித்துவான் குலாம் காதிறு நாவலர் அவர் களது நாகூர்ப் புராணத்தில் உள்ள காப்புச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

திருமா வுலக முள்வா மவை சென்னி தாழ்த்த
விருமாவினை யின்கந் தின்புற வாள்வோன் யாவன்
பெருமா னுயர்ந்தோன் பிறப்போ டிறப்பின் றித்தோற்று
மொருமா முதல்வன் வன்மா ணரணுற் றுவாழ்வோம்

அதே ஆசிரியரின் ஆரிபு நாயகம் என்னும் காப்பியத்தில் காப்புச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

உலகம் யாவுமே யாகிய வொருகதி ருணர்வா
னிலக நாடிமுன் னிருந்தவா றியற்றி மற்றெல்லாம்
விலக நின்றவை யல்லாதா யவைதோறும் விளங்கிக்
கலக மின்றியாள் பொருட்புறத் திஃதடைக் கலமே.

முஸ்லிம் புலவர்களின் காப்பியங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கடவுள் வாழ்த்துப் பகுதியில் அல்லாஹ்வையே முதலில் புகழ்வதாகச் செய்யுள்கள் அமைந்துள்ளன. சீறாப் புராணத்திலே உமறுப்புலவர் முதல் மூன்று பாடல்களாலும் அல்லாஹ்வைப் புகழ்கிறார். மேன்மையிலும் மேன்மையாய், உண்மையிலும் உண்மையாய், அறிவிலும் அறிவாய்ச், சிறப்பினை உடைய பரிமளத்திலும் பரிமளமாய், பரமாணுவுக்கும் பரமாணுவாய், கணிக்கக் கூடாத பேரொளி அனைத்தும் ஒப்பினும் ஒப்பாகாதாய், உருவிலும் உருவாய், பூமியிலே இருக்கின்ற பல உயிர்ப்பிராணிகளின் கருவிலும் கருவாய்ப் பெரிய உலகத்தை ஆட்சி செய்கின்ற கருத்தாவாகிய அல்லாஹு சுபுஹானஹுறு வதஆலாவை இருதயத்தின் கண் பொருந்தச் செய்வது கருத்தாகும்.' என்ற இக்கருத்துக்களை முதலாவது செய்யுளில் இவ்விதம் அமைத்துள்ளார் உமறுப் புலவர்.

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

சின்ன சீருவில் ஐந்து திருவிருத்தங்களே கடவுள் வாழ்த்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் அல்லாஹ்வைப் புகழ்வதாக அமைந்துள்ளது ஒரு பாடல். அப்பாடலிலும் நபியிறசூலுல்லாவின் சீருச் சரிதையைத் சிறிது சொல்லத் தனியவனுன அல்லாஹ்வின் அருளை நாடி நிற்கிருர் சின்ன சீரு ஆசிரியர் பனீ அகுமது மரைக்காயர் புலவர் அவர்கள். அல்லாஹ்வின் ஆற்றலைக் குறிப்பிடும் பொழுது உலகனைத்தையும் படைத்தவன் என்று கூறுவதற்குப் பதிலாக உலகின் பகுதிகளான, வானுலகு, அவனி, ஆகாயம், சூரியன், சந்திரன், நட்சத்திரம், அறுசு குறுசு, மலை, கடல், மக்கள், விண்ணவர் முதலான அனைத்தையும் படைத்து உயிராய் நின்ற தனியவன் என்று அல்லாஹ்வை இவ்வாறு புகழுகிருர் ஆசிரியர்.

வானுல கவனி காய மதிகுறு சறுசுபானு
மீனக முததி மாக்கள் விண்ணவர் முதலாய் மற்றுந்
தானமைத் துயிராய் நின்ற தனியவ னருளி ருலே
தீனபி யிறசூல் சீருச் சரிதையிற் சிறிது சொல்வோம்

(நகம்—மலை; உததி—கடல்.)

செய்கு அப்துல் காதிறு நயினுர் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள் தமது புதுகுச்சாம் என்கின்ற புராணத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் முதற் செய்யுளில் தாம் தமது காப்பியத்தில் சொல்லக்கருதிய —நுதலிய—பொருளைக் குறிப்பிடுகிருர். பின்பு ஆறு திருவிருத்தங்களில் அல்லாஹ்வை தோத்திரம் செய்கிருர். ஐந்தாவது திருவிருத்தத்தில் எங்கும் எல்லா இடங்களிலும் கலந்திருக்கின்ற அல்லாஹுத் தஆலாவை இவ்வாறு வருணிக்கிருர்.

வானத்தி னிருந்துவந்து வாயுவினிற் கலந்துதீயின்
ருனத்தி னிறங்கிநீரிற் றரித்து மண்டலத்திற் புக்கி
மானத்தின் மருவிவண்மை வாய்ந்தபுன் னுனியின்றுள்ளி
ஞானத்தி ருக்கையாக்கு நாதனே காவலன்றே

(மானம்—ஆகாயம்)

திருமணிமாலையிலும் சேகுனைப் புலவர் அவர்கள் கடவுள் வாழ்த்து முதலாம் செய்யுளில் நுதலியது கூறிவிட்டு அடுத்த ஐந்து செய்யுட்களில் அல்லாஹ்வின் காவலை நாடுகிறார்: எல்லாவுயிர்களினதும் கருத்து, நாட்டம், அனைத்தையும் இவை இவை என்று அறிந்து அவ்வுயிர்கள் அனைத்துக்கும் ஆகாரம் ஈந்து வேண்டுவனவற்றை அளித்து காக்கும் புகழ் மிக்க அல்லாஹ் வை இவ்வாறு ஒரு செய்யுளில் அமைத்துப் பாடுகிறார் புலவர்.

படர்ந்தபன் னிலத்துமுற் றபரிவுறு முயிர்க ளெல்லாந்
தொடர்ந்திடுங் கருத்தி னாட்டத் தோற்றமு மிவையென்
றுய்ந்து
திடந்தர வுணவு மீந்துதேடிய தளித்துக் காக்கு
மிடந்தரும் புகழின்மிக் கோனியல்பதேகாவ லென்றே

குத்பு நாயகத்தில் சேகுனைப் புலவர் அவர்கள் கடவுள் வாழ்த்தில் உள்ள. ஒன்பது பாடல்களில் அல்லாஹ்வை வாழ்த்துகிறார். முதலில் தாம் நுதலியது கூறிவிட்டு அல்லாஹ்வை வாழ்த்துகிறார். அறிவு முதலிய அனைத்துக்கும் அப்பாற் பட்டவன் அல்லாஹ் என்ற கருத்தை இவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார்.

ஆதியேயுள்ளத் துற்ற வறிவினுக் குச்சந் தோற்றுச்
சோதியே யின்ன பாங்கென் றுரைவளர் தொகைக்குட்
காணு
நீதியே நிறையிற் குன்று நிருமல ரெவரும் போற்று
மோதியே பன்மை காட்டு மொருமையே கருத்தனுமே.

அதே ஆசிரியர் புலவர் நாயகம் அவர்கள் தமது திருக் காரணப் புராணத்தில் ஆறு செய்யுட்களின் அல்லாஹ்வை வாழ்த்துகிறார். அவற்றுள் நான்காவது இவ்வாறு அமைந் துள்ளது.

செவிவிழி வாய்மூக் காக்கை செறிபுலன்பொறி
யிற்போக்காப்
புவிவளி யனனீர் சேர்ந்த பொருவிலா வுடற்குளாகி
நவிவழி சென்ற தூதர் நல்வழியொழுகி வாழ்வாய்
கவிவழி கருணைசெய்வான் கத்தனுளிருத்தி நெஞ்சே.
(நவி—சிறப்பு)

நாகூர்ப் புராணத்தின் கடவுள் வாழ்த்தில் ஒரு செய்யுளிலே அல்லாஹ்வுக்கு வணக்கஞ் செலுத்தப்பட்டுள்ளது. குலாம் காதிறு நாவலரின் அச்செய்யுள் வருமாறு:

சீர்கொண்ட யகன்புவியைக் கறங்குதிரைக்
தடங்கடலைத் திரண்டு மல்குங்
கார்கொண்ட வுயர்விசும்பை யாண்டாங்கினை
மைபொருளாய்க் கவினத்தோற்று
மார்கொண்ட விருதிணையை யாக்கியமைத்
தியலவிதித் ததீதமாகி
வார்கொண்ட பெருங்கருணை மேவுமொரு
மெய்க்கடவுள் வணக்கஞ்செய்வோம்.

குலாம் காதிறு நாவலர் தமது மற்றைய காப்பியமாகிய ஆரிபு நாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் இடம்பெற்றுள்ள முதலாவது செய்யுளில் தாம் நுதலிய பொருளைக் கூறிவிட்டு மூன்று செய்யுட்களில் அல்லாஹ்வைப்புகழ்கிறுர். அவற்றுள் மூன்றுவது செய்யுள் அல்லாஹ்வின் தனிப் பண்புகளை வருணிக்கிறது. அச்செய்யுள் வருமாறு:

பெரியனைத் தன்னிற் றேற்றிப் பெருநிலை கொண்டு தாழ்தற்
குரியனைப் புகழ்த்த வாதிக் குரியனை யுரிமை பூண்ட
துரியனைத் துரியாதீத சோதியைக் காண்கைக் கென்று
மரியனை வழிக்கொ ளாதாரல்லதை வழிக்கொள் வாரே.

வண்ணக்களஞ்சியப் புலவரின் கடவுள் வாழ்த்துக்களின் அல்லாஹ் பற்றிய வருணனைகளை எடுத்துக்கொள்வோம்.

இராஜநாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் நான்கு செய்யுட்களில் அல்லாஹ்வின் புகழ் பாடப்பட்டுள்ளது. அவற்றுள் முதலாவதாக அமைந்துள்ள செய்யுள் வருமாறு:

புவிமுமு தமைத்துமுத் தொழில்புரிந் துவாழ்
கவினுறு மளவி லாக்கருணை வள்ளலைக்
குவியிடு வினையெனுங் கோதி லார்மனத்
தவிசில் வீற்றிருக்குஞ் சந்ததனைப் போற்றுவாம்.

வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகத்தில் உள்ள முதல் நான்கு செய்யுட்களில் அல்லாஹ்வின் புகழ் எடுத்தோதப்படுகிறது. முதலாவது செய்யுள் வருமாறு:

திருவருள் பொழியு மாதி நாயகனைச் செழுமறைப்
பொருணினுட் பொருளை
வருபுக ழெவையுந் தனக் குரியவனை மதித்தள
விடற்கரியவனை
யொருபொரு ளெனினு மிணையு மிக்கது மற்றுயர்ந்து
வாழ்சுயம்பு வானவனைக்
கருதிய தெவையு முறுதியின் முடிக்குங் காரணக்
கடவுளைத் துதிப்பாம்.

வண்ணக்களஞ்சியப் புலவரின் மற்றைய காப்பியமான தீன்விளக்கத்தில் வரும் கடவுள் வாழ்த்தில் முதலிரண்டு செய்யுட்களிலும் அல்லாஹ்வின் அருள் வேண்டப்படுகிறது. அவற்றுள் முதற் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

திருவணி மணியாய் முகம்மதை யமைத்துத்
திங்கள் செம்பருதி மீன் கணங்கள்
பெருகிய திரைவா ருதிவரைக் குலங்கள்
பிறங்கு பொன்னுல குமண் ணுலகு
நரர்முத லியபல் லுயிர்களு மமைத்து
நலிவறு கருணை யினுணவு
தருபவன் வளர்த்துக் காப்பவ னுயர்ந்த
தனியவ னின்னயவன் றுணையே

காப்புச் செய்யுளையும் சேர்த்து ஏழு திருவிருத்தங்களில் அல்லாஹ்வின் காவலை நாடி அவனைப்புகழ்கிறார் பதுறுதீன் புலவர் தாம் ஈழத்து யாழ்ப்பாணத்தில் பாடிய முகியித்தீன் புராணத்தில். பாயிரத்தில் அவை அமைந்துள்ளன. ஆறுவது செய்யுள் அல்லாஹ்வின் தனிச் சிறப்புக்களை இவ்வாறு பாடுகிறது.

உருவினி லுருவு மாகி யொளிவினி லொளிவு மாகிப்
பொருவிலாப் பொருளுமாகி புண்ணியத்துறையு மாகி
மருவினின் மருவுமாகி மலரினின் மலராம் பஞ்சக்
கருவினிற் கருவாய் நின்ற கத்தனைத் தொழுவ தாமே.

அல்லாஹுத்தஆலாவைத் துதித்தபின்னர் கடவுள் வாழ்த்தில் புகழப்படுபவர்கள் நபிமார்கள். பெரும்பாலான புலவர்கள் எம் பெருமான் முகம்மது (ஸல்) அவர்களையே முதலில் புகழ்வர். ஏனைய நபிமாரைக் குறிப்பிட்டுவிட்டு எம் பெருமானாரைக் குறிப்பிடுபவர்களும் உளர். அல்லாஹ்வைப் புகழ உபயோகித்த அதே பாவினம் முகம்மது நபி (ஸல்) அவர்களைப் புகழ உபயோகிக்கப்படுவதில்லை. புகழ்பவர்கள் மாறமாற பாவினமும் மாறிக் கொண்டே வருகிறது.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட சீறாப் புராணத்தில் உமறுப் புலவர் தமது கடவுள் வாழ்த்தில், முகம்மது நபி (ஸல்) அவர்களை இவ்வாறு வருணிக்கிறார். உலகத்தை நிரப்ப வந்த சன்மார்க்கம் இஸ்லாம். நான்கு வேதங்களுக்கும் ஒப்பற்ற அடையாளமாய்த் தோன்றியவர்கள் எம் பெருமானார் (ஸல்) அவர்கள். அழகை உடையவர்களாகவும், சிறப்பைப் பொருந்தியவர்களாகவும் தோன்றியவர்கள். அவர்களின் இரு பாதங்களையும் நீதியையுடைய நாக்கில் வைத்து துதித்தவர்கள் பாக்களினால் கூறிய கீர்த்தியை அடைவார்கள். அதிகம் அதிகமாகக் கவிகளைப்பெறுவர்; உண்மையை உணருவர்; கேடான செயல்களை நீக்கிவிடுவர். இக்கருத்துக்கள் ஒரு செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளது.

கவியா லுரைத்தபுகழ் பெறுவார் மிகுத்தகவி
யடைவார் கலக்க மறவே
செவியா ரமெய்ப்பொருளை யறிவார் மனத்தினுறு
செயல்கே டகற்றி விடுவார்
புவியா ரமொய்த்தநெறி மறைநாலி னுக்குமொரு
பொறியா யுதித்த வடிவார்
நவியார் சுவர்க்கபதி நயினர் பதத்துணையை
நடுநா வில்லவைத் தவர்களே.

சின்ன சீறாவில் பனீ அகுமது மரைக்காயர் புலவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழும் பொழுது அண்ணல் (ஸல்) அவர்கள் உலகில் பிறப்பதற்கு முன் இருந்த நிலையைக் குறிப்பிட்டு இவ்வாறு பாடுகிறார்.

தண்டரளத் தின்சோதி தயங்கியேழ் கடலினுகி
விண்டருவெக் கீன்றன்னில் விளக்கெனத்துலங் கித்துவிக்
கண்டருமஞ் ஞையாகிக் கத்தனைத்துதித் தோர்பாத
புண்டரீ கத்தைச்சிந் தையிருத்தியே போற்றுவோம்.

வண்ணக்களஞ்சியப் புலவர் தமது இராஜநாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் நபிகள் பெருமானார் செய்து காட்டிய அற்புதங்கள் சிலவற்றை எடுத்துக்காட்டுகிறார். அச்செய்யுள் வருமாறு:

அமரருக்குத் தலைவரான ஜிபுறீல் மனதி
லதிசயப் பட்டரு ளவேபொன்முடி மீதுகண
மதனை யொப்பித் தமுதி யோர்கொடி யபாலையினிலே
யிமவருத் தத்தை யடைவோர் மகிழ்வு கூர
நதியினை யழைப்பித் தருங்கு ஞாளர் முடிமீ துமணி
யிலகுசர்ப் பத்தினொடு பேசு மகராச நயினர்
கமழிறைச் சிக்கவ ளவாயினொரு வேடனிரு
வலையினிற் சிக்கு முழைவா ழநெடு நாளருள் செய்
கருணையுற் பத்திவ டிவா கிமதினவில் வளர்வோர்
வமெனவொற் றைத்தருவை யோதி வரவே யருளி
வெருகணத் துற்ற ஜின்னெ லாமுரியதீ னிலையில்
வரவிரட் சித்த மகுமூ துநபி பாத நினைவாம்.

அதே ஆசிரியர் தம்து குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தில் இவ்வாறு முகம்மது நபி (ஸல்) அவர்களைப் பாடுகிருர்.

சோதிசேர் முத்தொளிய தாயினேர் நித்தியவிறை
துதர்யாவர்க்கும் முதியோர்
வேதசா ரப்பொருண்மெஞ் ஞானரு பக்கடவுள்
மேகநீளற் கவிகையே
யாதியாயமுத்தி நிலைவாழ்வை யீயத்தரு வதான
தோர் முக்கிய விருதாம்
நாதர்வீ றுற்றமகு மூதர்பா தத்துணை யெந்நாளு
நாவிற் புகழுவாம்.

வண்ணக்களஞ்சியப் புலவரின் தீன்விளக்கக் கடவுள் வாழ்த்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்:

திடனுலவு சுருதியிறை தந்தருள்வ தாகநபிக
டிண்புவியின் மற்றுளோரா
யடல் பெருகு குபிரகல வந்தநபிமார்கள் பல
ரன்பொடுதுதிப் பதானேர்
வடிவுதரு மரகதநிறங் கொளும ரமென
மஞ்சரியினுற் றவாச
நெடியதொரு தருவினிலிருந் தமகுமூதர் பதநெஞ்சினி
லிருத்துவாமே.

புலவர் நாயகமோ இரண்டு செய்யுட்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தம் சிறமேற் கொள்கிருர். தமது புதுகுச்சாம் என்னும் காப்பியத்தில் வரும் கடவுள் வாழ்த்தில். அவற்றுள் முதலாவது இவ்வாறு உள்ளது.

தோற்றிய பன்மையிடங் களுமனவயிற்
றுலங்கியவுயிர் களும்பலவு
மேற்றிடந் தோற்றுவுண் மையுமறிவு
மிலங்கிய வொளி வொடுகாட்சி
யாற்றலினுன் கினருமணி யாகியசன்
றமெய்ப்பொருளென விளங்குந்
தேற்றவண்சோ திமுகம்மது நபிதஞ்சீர்
பதஞ்சிரமிசை யணிவாம்.

அதே ஆசிரியர் திருமணிமாலையில் உள்ள கடவுள் வாழ்த்தில் நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்களைச் சரணடைகிறார் இவ்வாறு:

நீதமும்பல வரங்கள்கொண் டநனிநேர் மையும்பரவு
கின்றபுந்தியி னர்சொல்
வேதமுந்தகை யமந்திரங்களோ டுவீறு மன்புநிறை
யின்பநன்சுவை யெல்லாம்
போதமும்பெரு கவுந்தருந்தரு திபூமலர்த் ததிவிதங்கள்
மிஞ்சியதுவே.

சேகுனுப் புலவர் தமது குத்பு நாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் முகம்மது நபி (ஸல்) அவர்களைப் புகழும் பொழுது முன்பு இருகாப்பியங்கள் துதித்தது போலல்லாது வேறுவிதமாக வாழ்த்துகிறார். ஓசைநயம் மிக்க அச்செய்யுள் வருமாறு:

விதியாதி யருளோடு மிகவாழி நிலைசீர்மை வினையோடு
மறிவோர்மைமா
கதியாதி பெறுபேறு நவநீத முயர்மேன்மை கனமியாவு
மினிதிருமால்
துதியாவு முருவாகி யுயிராகி யணியாகி சுயமாகி
நயமாகியார்
மதியாதி பொருளாகி மதினாவில் வருமாதி மகுமூது
நபிபாதமே

செய்கு அப்துல் காதிருப்புலவர் அவர்கள் தமது திருக் காரணப்புராணத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்களை இரண்டு செய்யுள் களில் துதிக்கிறார்கள். அவற்றுள் ஒன்று வருமாறு:

பாரணங் கின்பணி யாயெவ ருந்தொழு
பாதநிலந் தெரியாக்
காரணர் மன்புகழ் நாயகர் வெண்சசி
காவல் பெறுந்தகையா
ராரண மேன்பொருண் மாதவர் தங்குரு
வாய முகம்மதுவெள்
வாரண மஞ்சினி லேவரு மெந்துரை
வாழ்சரணஞ் சரணே.

ஒரு செய்யுளில் அல்லாஹ்வைத் துதித்த குலாம் காதிறு நாவலர் அவர்கள் மற்றொரு செய்யுளில் நபிகள் பெரு மானார் முகம்மது (ஸல்) அவர்களை இறைஞ்சுகிறார் தமது நாகூர் புராணம் என்னும் காப்பியத்தில் உளள கடவுள் வாழ்த்தில். இச்செய்யுளில் நபிகள் பெருமானாரின் வாழ்க்கை யைச் சுருக்கமாக இவ்வாறு வருணிக்கிறார்:

பொருப்புவனம் புணர்திரைவான் புவியிவற்றில்
விரவுற்ற பொருட்கள் யாவு
முருப்புவனம் பெறவெளியாங் காரியத்தின்
காரணமா யுண்டாய்முன் னங்
கருப்புவனம் புடைமல்குங் கண்ணகன்மா
நகரெனுமக் காவிற்றோன் றி
யிருப்புவனம் பெருகிய மதீனவாழ
நபிபெருமா னிறைஞ்சுகிர்பாம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வேறொரு விதத்தில் புகழ்கிறார் குலாம் காதிறு நாவலர்: அவர் தமது ஆரிபு நாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் இவ்வாறு பாடுகிறார்

உதியாதவ னுமுட்கவருசோ திமலிமுத்த வுருவாயவதரித்
தரோ
நிதியாகிய நமக்குமறைநேர் வழிதெரித்த நிரைநாடிய
கமுற்றமான்
மதியாசுக முடுப்புமரமா மலைதரக்கு மறியாவர
வுரைத்தமா
விதியாவுமு ளமக்கமகு மூதுநபியற் புவிளைபா
தகமலத்தையே.

பதுறுதீன் புலவர் தமது முகியித்தீன் புராணத்தில் உள்ள பாயிரத்தில் முகம்மது நபியவர்களைப் புகழ இரண்டு செய்யுட்களைப் பயன் படுத்தி யுள்ளார். இரண்டாம் செய் யுளில் உலகில் இஸ்லாத்தைப் பரப்பி அமைதியை நிலை நாட்டிய அண்ணலாரை இவ்வாறு வருணித்துள்ளார்:

மேதினியிடத்தி லூற்றுவிளங்கு தீன்பயிரை யேற்றிக்
கோதிலாப் புலியுமானுங் குறுமுயற் குடமுமாவு
மீதிரைக் கயலுஞ் சோங்கும் விண்மதி யரியினேடு
மாதவத் துடனே பேசு முகம்மதைப் புகழுவோமே.
(குடம்—பசு; மா—சிங்கம்: சோங்கு—நாரை; அரி—சூரியன்)

நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்களைத் துதித்து விட்டு முஸ்லிம் புலவர்கள் தமது கடவுள்வாழ்த்துப் படலத்தில் ஏனைய நபிமார்களைத் துதிப்பர். சில புலவர்கள் ஒருலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களை முதலில் குறிப்பிடுவர். மற்றுஞ்சிலர் முறுசலீன்களான முன்னூற்று முப்பத்து மூன்று நபிமார்களைத் துதிப்பர். இன்னும் சிலர் உலுல் அஸ்மி என்னும் ஆறு நபிமார்களை மாத்திரம் வாழ்த்துவர். இனி, இவ்வாறு வாழ்த்தப்பட்டவர்களைப் பார்ப்போம்:

சீறாப் புராணத்தில் முதலில் முறுசலான நபிமார்கள் வாழ்த்தப்படுகின்றனர். றசூல்கள் எனப்புகழப்படுகின்றனர். உமறுப்புலவர் அவர்கள் இவ்வாறு பாடுகிறார்.

ஆதிதன் கிருபை தாங்கி யகில மீதர சுவைகித்
நீதி லாச்சோதிபோ லத்தீன் பயிர்விளக் கஞ்செய்தே
மூதறி வுடையரான முறுசலீன் களையெந் நாளும்
போதர வுடனே போற்றிப் புந்தியின் மகிழ்ச்சி செய்வாம்.

ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களை உமறுப் புலவர் இவ்வாறு வருணிக்கிறார்.

தாரா தரத்தையே மேலே கவிக்கவே
தாடாண்மை பெற்ற நயினர்
பேரா யுதிக்கவே வானோ ரைக்கவே
பேருய் விளக்கு முரவோ
ராராய்வின் மிக்கபேர் நூருயிரத்து நா
லாருயிரத்து நபிமார்
மாராய மிக்கபேர் வாயார வைத்தபேர்
வாழ்வார் சுவர்க்க பதியே.

சின்ன சீருவில் பனீ அகுமது மரைக்காயர் புலவர் முதலில் உலுல் அசுமகளையும் முறுசலீன்களையும் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

மறையொரு நான்கு நீதி மருவிய சுகுபு நூறு
முறையுது லசுமென்றேங்கு முத்தம ருடனே நல்ல
முறுசலீனவர் களெண்ணின் முதுக்குறை நபிமார் செய்ய
நறைகமழ் வனசபாத நாவிஞற்றுதி செய்வாமே.

மற்றொரு பாடலில் இவ்வாசிரியர் நபிமாருட் சிலரை அவரவர் தம் சிறப்பியல்புகளைச் சுட்டிக்காட்டிக் குறிப்பிடுகிறார்.

இரவியிற் பொறித்த நாமத் தியல்பினர் மிசுருற்
றிற்புட்
கரம்வரச்சீட்டு விட்டோர் கனவரிப் பலகையோர்ந்தோர்
வரிசெறி புலியாயாழி வாயினிற் றரித்தோர் வான்று
சரையினில் விசித்தோர் பாத வம்புயஞ் சிரசிற்
கொள்வாம்.

புதுக்குச்சாமில் சேகுனாப் புலவர் ஒரு செய்யுளில் ஏனைய நபிமார்கள் அனைவரையும் குறிப்பிடுகிறார் இவ்வாறு:

மேலா யனைத்துவரு தானாய் விளக்குநெறி வீணா
யமைத்த நபியார்
பாலாய் தமக்குளுயர் பேறாய் வரத்தகுதி பாராள
மொய்த்த பெரியோர்
நூலா யுளப்பயனு நாவா [illegible]ரைத்தருளு நூறா
யிரத்தோ டிருபா
னாலா யிரத்திநபி மார்பா தபொற்கமல நாணா ளுளத்தி
லணிவாம்.

திருமணிமாலையில் புலவர் நாயகம் ஓரிலட்சத்திருபத்து நாலாயிரம் நபிமார்களைக் குறிப்பிடும் பொழுது இந்த எண்ணிக்கையை ஈரைம்பத்தாறொழிய வாரைந்தினாயிரவர் என்று கூறுகிறார். ஈரைம்பது நூறு ஆகும். ஆறொழிந்த ஆறைந்து இருபத்து நான்காகும். எனவே ஈரைம்பது இருபத்துநான்கு ஆயிரம் ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரமாகும். இதனையே இவ்வாறு குறிப்பிடுகிறார் ஆசிரியர்

சீருந்து மாலநபி பால்சிந்தும் வேர்வையது
தோமெங்கு மோடியுலவிப்
பேருந்து நேர்மைகொடு பூநின்று [illegible]யநெறி
பேசும்பலா பலனுளார்.
தாருந்தும் வாடையொடு போதங்க ளாசைபல
தாவுந்தயா நிதியனா
ரீரைம்ப தாறொழிய வாறைந்தி னாயிரவ
ரியாநெஞ்ச மீதணிகுவாம்.

குத்பு நாயகத்தில் சேகுனாப் புலவர் இந்த நபிமார்களின் எண்ணிக்கையை ஈரறுப தொரு நான்கினாயிரவர் என ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களை இவ்வாறு அழைக்கிறார்.

சீரறிவு பெறுமாந்தர் பாவுபுகழ நணியோங்கு
தேவநபி யொளிவார்ந்ததாற்
பேரறிவு கொளவேந்த வானவர்க டொழவாய்ந்து
பேறணிகொண் முதுசான்றவர்.
ஓரறிவு முதல்சூழ்ந்த சீலன்ஸே புரிவேந்த
ஞேதுபருள் நெறிசேர்ந்துவா
மீரறுப தொருநான்கி ஞயிரவர் கழலாய்ந்த
வேகவுள மிசையேந்துவாம்.

புலவர் நாயகம் தமது திருக்காரணப் புராணத்தில் இந்த எண்ணிக்கையை 'நூருயிரத்திருபத்திஞலாயிரம்' என வெளிப்படையாக இவ்வாறு பாடுகிருர்:

மருவுற்று ளார்சோதி யொளிவிற் சுரூபமான
மயினிற்ப வீழ்நீரிஞ
லுருவுற்ற பூமேனி தெளிவுற்ற பேராள
ரொருமைக்குண நாதரா
யிருமைக்கு மேலான நெறிபெற்ற வாழ்வாள
ரிசைமொய்த்த நூருயிரத்
திருபத்தி ஞலாயி ரநபிக்கு மாளாமென்
னிதயத்திஞன் மேவுவாம்.

வண்ணக்களஞ்சியப் புலவர் தமது இராஜநாயகத்தில் நபிமாரைத்துதிக்க இரண்டு செய்யுட்களைப் பயன் படுத்தி உள்ளார். ஒன்றில் முறுசலீன்களையும் மற்றதில் ஓரிலட்சத்து இருபத்தி நாலாயிரம் நபிமார்களையும் துதிக்கிருர் ஆசிரியர். இவ்வாசிரியர் தமது குத்பு நாயகத்திலும் இதே முறையையே கையாண்டுள்ளார். ஆனல் தீன் விளக்கத்தில் ஏனைய நபிமார்களைக் குறிப்பிடாமலே விட்டுவிட்டார் ஆசிரியர். முறுசலீன்களைப்பற்றி இராஜநாயகம் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

கரைசெ யாப்பெருங் கருணைவல் லவனருள் கதித்தே
யுரைசெய் சின்னநன் னபிகளி லுயர்ந்தினி துதித்தோர்
முரசியம்பிய முன்றில ராய்முடி தரிக்கு
மரசர் நாயகர் முறுசலீன் கணையகந் துதிப்பாம்

எல்லா நபிமார்களையும்—ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களையும் இராஜநாயகத்தில் வண்ணக்களஞ்சியப்புலவர் இவ்வாறு பாடுகிறார்.

ஆற்று மொரு தனிமுதல்வ னருள்பெருக்க குபிர்
கணைகள ளைத்தும்போக்கி
நாற்றிசையுந் தீன்பயிரை வளர்த்தருள வுதித்தசின்ன
நபிமாரென்றே
யேற்றுமிலக் கத்தினிரு பத்திஞ லாயிரவ ரிணைப்பொற்பாத
மாற்றரிய பதவிபெற்று வாழ்சவிதி யுடையவரே
வழுத்துவாரே.

வண்ணக்களஞ்சியப் புலவர் தமது குத்பு நாயகக் கடவுள் வாழ்த்தில் முறுசலான நபிமார்களைப் பற்றி இவ்வாறு வருணிக்கிறார். பின்பு துதிக்கிறார்.

பூதலந்தனிற் குபிரிருளக லவற்புதஞ்சேர்
சீதசந்தி ரானந்தம் வந்துதித்த தாந்திறலா
ராதியன்பருள் பெருகிய முறுசலீனுனோர்
பாதபங்கய மலரிதயா சனம்பதிப்பாம்

இவ்வாறே ஓரிலட்சத்து இருபத்திஞலாயிரம் நபிமார்களைப் புகழ்கிருர்; வாழ்த்துகிருர்.

ஆயமெய்ப் பொருளிடு தொனிவரப் பெருமரியோர்
தூயவற்புத நபி களாய்த்துலங் கியவொருநா
ருயிரத்தி ருபத்தி ஞலாயிர ரடிகள்
வாயினிற் புகழ்துளத் தினுமிருத்தி வாழ்த்துவனே

குலாம் காதிறு நாவலர் தமது நாகூர்ப்புராணத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் எம்பெருமானூர் முகம்மது (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த நபியையும் குறிப்பிடவுமில்லை. புகழவுமில்லை. ஆனால் நாவலர் அவர்கள் தமது ஆரிபு நாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபி மார்களைப் புகழ்ந்து இவ்வாறு பாடுகிறார்:

குருமிக்க மேலான வொருகத்த னாதார குதுறத்தினாற்
பருமித்த தியோரையழிவித்த தாடாழ்வுபடநிற்பமா
லொருமித்த நேரான நெறிபெற்ற வாழ்வாளரோ
ரிலக்கமோ
டிருபத்து நாலாயிரவருக்கு மாறுத விதயத்தரோ

முகியித்தீன் புராணத்தை இயற்றிய பதுறுத்தீன் புலவர் அவர்கள் முறுசலீன்களைக் கூறுது உலுல் அஸ்மி எனப்படும் நபிமாரைப் புகழ்கிறார். உலுல் அஸ்மி என்னும் ஐவரையும் அவரவர்களின் சிறப்பாற்றலைக் குறிப்பிட்டு வருணிக்கிறார். ஆதம் நபி (அலை) அவர்களையும், நூஹு நபி (அலை) அவர்களையும், இப்றாஹிம் நபி (அலை) அவர்களையும், மூசா நபி (அலை) அவர்களையும் ஈஸா நபி (அலை) அவர்களையும் முகம்மது நபி (ஸல்) அவர்களையும் முறையே இவ்வாறு பாடலில் அமைத்துப் பாடுகிறார்.

நரர்களைப் பெற்றவர் நதிவர வுற்றவர் நப்றூது
வைத்தழலைச்
சுரர்பதி யொப்பென வரமருள் பெற்றவர் தொலைநதி
தட்டினவர்
திருமறி யத்துடை வயினிலு தித்தவர் தெரிமறை
யுற்றிடுவோர்
ஒருவனோ டுற்றுரை யறுதிபெ ருத்தவ ரானுலகு
மைப்புகழ்வாம்

(வயின்—வயிறு)

அத்துடன் நின்று விடாது நபிமார்கள் அனைவரையுமே குறிப்பிடுகிறார். நபிமாரின் மொத்த எண்ணிக்கையான ஓர் இலட்சத்து இருபத்து நாலாயிரம் எல்பதை நூற்றிரு பத்து நாலாயிரம்' எனக் கூறுகிறார். இது ஆங்கில மொழியில் எண் கணக்கிடுவது போன்றிருக்கிறது. one hundred and twenty four thousand என்பதுபோன்று தொனிக்கிறது. இவ்வாறு அமைந்துள்ள கவிதையை எடுத்துக் கொள்வோம்.

மேலோரொளி கீர்த்தி விளங்கிடவே
சீலாரெழில் வந்து சிறந்தருளும்
பாலாமொழி நூற்றிரு பத்துடனே
நாலாயிர நன்னபி பேர்சொலவே.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்குப்பின் இஸ்லாமிய அரசைக் கொண்டு நடத்திய முதல் நாலு கலீபாக்களை வரலாற்று ஒழுங்கு முறைப்படி கடவுள் வாழ்த்தில் இடம் பெறச் செய்துள்ளனர். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களின் ஆசிரியர். அபூபக்கர் (றலி) அவர்களைத் துதிக்கவந்த உமறுப்புலவர் தமது சீறாப் புராணத்தில் இவ்வாறு புகழ்கிறார்.

புரசைக் கடக்கரி கணிரை தட்டறக் குபிரர்
புவியைப் படக்க டவியே
சரகுற்ற நற்பதவி வழியிற் புகுத்தி யுயர்
தலைமைக்கு வைத்த பெரியோர்
பிரசத் துளித்திவலை சிதறிக் கிடக்கு மிரு
பிணையற் புயத்து நயினு
ரரசுக்கு வைத்த நெறி வரிசைக்கு மிக்கதுரை
யபுபக்கரைப்புக லுவாம்.

செய்கு அப்துல் காதிறு நெயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள் தமது புதுகுச்சாம் என்கிற புராணத்தில் அபூபக்கர் (றலி) அவர்களை இவ்வாறு புகழ்கிறார்.

அறிவிற்சிறந்திலங்கு பொருளிற்படர்ந்தெழுந்த
வருளிற்பிறந்துவந்த நயினூர்சென்
னெறியிற்நலநீது நின்று புகல்தற்கமன்றுவிண்ட
நிலைபற்றவல் பொருந்த வழியாக
வுறுதிக்கியன்றுநண்பி னுரைசொற்றுளங்கனிந்த
வுயர்சித்திகென்றணிந்த பெயரார்நீள்
பொறையிற்புடர்ந்த வென்றி யபுபக்கர் தம்பதங்கள்
புகழ்பற்றியெந்த நெஞ்ச மணிவாமே.

குத்பு நாயகத்தில் செய்குனுப் புலவர் அவர்கள் அபூ பக்கர் (றலி) அவர்களின் பல்வேறு இயல்புகளைப் புகழ்கிறார். அவற்றை ஒரு செய்யுளில் இவ்வாறு அமைத்துப் பாடுகிறார்:

தனுதுற்ற மெய்ச்சோதி யெனுகத் தன்மிக்கான
சபாஅத் தருட்பாதையார்
விஞுவிற்கு மொப்பான வளாகத் தனிற்பேதை
விவாகத் தளித்தோர்துயில்
கனுவிற்ற வப்பான்மை விடார்துட்ட சொற்காய
கலேயிட் டடைத்தார் தம்வா
யினுவுத் தமத்தோழர் அபூபக்கர் சித்தீகை
யெமாகத் தினுட் பேணுவாம்.

திருமணிமாலையில் அதே ஆசிரியர் அபூபக்கர் (றலி) அவர்களைப் புகழும் பொழுது தௌர் குகையில் அபூபக்கர் (றலி) அவர்களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாம்பினுல் வரவிருந்த அபாயத்தைத் தவிர்த்த நிகழ்ச்சியைச் சிறப் பாகக் குறிப்பிட்டு இவ்வாறு பாடுகிறார்.

வாரியாடையணி மாநிலப்புகழும் வள்ளறம்மொடு
மருங்கினர்
காரியாடுமலை நாகமுன்புவாரக் காலணித்தடைபடுத்தினர்
தாரினின்றதுளி தேனலர்ந்தொழுகு தண்ணிவர்ந்தபுய
மன்னர் கோன்
பேரிலங்குமபு பக்கர் தண்சரண பேறுளங்கொடு
விளக்குவாம்.

திருக்காரணப் புராணத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் பிலால் (றலி) அவர்கள் அடிமையாக இருந்த சமயம் நண் பகல் மணலில் கிடத்தப்பட்டு மார்பில் கல்வைக்கப்பட்டி ருந்த பொழுது அவரை மீட்ட நிகழ்ச்சி சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

மல்லிடு பெருங்கய வரஞ்ச வொருவன் கனக மார்பிடை
யிருத்து நெடிய
கல்லினை யெடுத்து ரிமையாகவிடு நீதிமதி காரண
மறைக்குரி சிலாஞ்
சொல்லரி யவாயினித முஞ்சிலை களுய்த்தவ முருது
துதியைக் கருதியே
நல்லியல் விளக்கும பூபக் கருயர் தண்பதும நாண்
மலர்பதம் புகலுவாம்.

இனி, வண்ணக்களஞ்சியப் புலவர் அபூபக்கர் (றலி) அவர் களைத் தமது காப்பியங்களில் உள்ள கடவுள் வாழ்த்தில் எவ்வாறு புகழ்ந்துள்ளார் என்பதைப் பார்ப்போம். தொழு கைக்கு அபூபக்கர் (றலி) அவர்களை முஃமினாக்கப்பட்ட நிகழ்ச்சியைச் சிறப்பாகக் குறிப்பிட்டு இராஜநாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் இவ்வாறு பாடுகிறார் வண்ணக் களஞ்சியப்புலவர்.

நின்று பல்லுயிர் களெல்லா நெடிதிரங் கியகியாமத்
தென்று முள்ளவன் றன்பக் கலிரந்துமன் ருடி மீட்கு
நன்றிசெய்தருள் கபீ புநபி பின்னே தொழத்தா முஃமின்
றன்றி மாமத் துச்செய்த அபூபக்கர்பதந் துதிப்பாம்.

வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகத்தில் அபூ பக்கர் (றலி) அவர்கள் புகழப்படும் பொழுது அல்லாஹ்வைப் பற்றியும் அவனது இறுதி றசூலைப்பற்றியும் அபூபக்கர் (றலி) அவர்கள் எம்பெருமானார் முகம்மது (ஸல்) அவர்களுடன் தௌர் குகையில் தங்கி இருந்தபொழுது பாம்பினால் ஏற் பட இருந்த துன்பத்தைத் தவிர்த்தமை பற்றியும் குறிப்பிட்ட

பின்னர் அபூபக்கர் (றலி) அவர்கள் இவ்வாறு புகழப்படு கிறார்கள்.

ஒருவனுதிப்பிரபை முத்தாய் மயூரவடிவென
 வியாவுக்குமொரு வித்தாயமுனை
 பொருளொருதி நேயச்சிறுவனுக் காவிபோமளவிலே
கருணையாகிப்பெயர் சொலிக்கூவும் போதி
 லுயிர்பெறுவதாய் நித்திரைவிழித்தார்கள்.
 போனெடியகவலை தீரக்குயிலிசைத்தாய் முன்னுக
 வரவே
யருள்வரொடுற்று மதினப்பாதையேகி
 வொருமலையில் வாழ்புற் றரவுரித்தாகவே
 வருதலறிகிலா தப்பொழுதினிற்பாத தாமரையினல்
வருதுவாரத்தினையடைத் தேகநாதனபி புகலவே
 மற்றதைவிடுத் தோர்பிரகாச வருண்மணி
 யபூபக்கரினி சித்தீகையே துதிசெய்வாம்.

தீன் விளக்கத்தில் வண்ணக்களஞ்சியப் புலவர் வேறுவித மாக அபூபக்கர் (றலி) அவர்களைப் புகழ்கிறார். அச்செய்யுள் வருமாறு:

ஆதி வல்லவன் றிருநபி யொடுமுறைத் தருளி
னேதி நின்றிறந் தவர்க்கு முன்பினு ளத்துதித்த
தாதி தென்றணி யணிய தாய்த்தந் திபுலீசை
வாதை கொண்ட தோரபூபக்கர் பதங்கள் வாழ்த்திடுவாம்.

குலாம் காதிறு நாவலரோ தமது நாகூர்ப் புராணத்தில் நான்கு கலீபாக்களையும் ஒரே செய்யுளில் புகழ்ந்துள்ளார். ஆனல் ஆரிபு நாயகத்தில் ஒரு செய்யுளில் அபூபக்கர் (றலி) அவர்களைப் புகழ்கிறார். அவ்வாறு புகழும் பொழுது ஓசை நயம் மிக்க பாடலாக அந்தப்பாடலை அமைத்துள்ளார். குலாம் காதிறு நாவலரின் அத்தகைய பாடலை இப்பொழுது பார்ப்போம்.

ஆதித்த னுகத்தி னுர்வித்த நாமத்தி னுரபிற் னுகத்தினர்
சேதித்த காதத்னுத யேயுற்ற நீதத்த சிதத்த யாளத்தினுர்
சாதித்த பேர்கட்கு ளேமிக்க பேர்பெற்ற தாமத்த
ரேமத்தினுர்
போதித்த பூபக்கர் பாதத்தை யேநித்த போகத்திரே
கிப்பமே.

பதுறுதீன் புலவரும் தமது முகியித்தீன் புராணத்தில் தௌர் குகையில் உள்ள துவாரம் ஒன்றினுல் வெளிப்பட்ட பாம்பைத் தடுத்த நிகழ்ச்சியையே அபூபக்கர் (றலி) அவர்களை புகழப் பயன்படுத்துகிருர். செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

மலையுற்ற வன்குபிரர் மனையிற் றுடர்ந்திடவு
மயமுற்றெழுந் நயினுர்
மலையுற்றிருந்துதிரு மடியுற் றுறங்கநெடு
வளையுற்றநெட் டரவைதா
ளுலையுற் றடைக்ககடி விடமுச்சி மட்டுமுற
வுடற்சுற்று மேவயர்வுரு
ரலைவைத்து வாயினிடை கலைவைத் தடைக்குமுய
ரபூபக் கரைப்புகல்வாம்.

அடுத்து கடவுள் வாழ்த்துப் படலத்தில் புகழப்படுபவர் உமறு கத்தாப் (றலி) அவர்களாவர். உமறு கத்தாப் (றலி) அவர்களின் வீரமும், நீதிமுறைமையும் ஆட்சி நேர்மையும் விதந்தோதப்படுகிறது. உமறு கத்தாப் (றலி) அவர்கள் தமது மகனைப் பொறுத்தவரையில் கூட நீதிக்கு முரணுகாமல் நடந்து கொண்ட விதமும் சுட்டிக்காட்டப் படுகிறது. இக்கருத்துக்களை உமறுப்புலவர் தமது சீருப் புராணத்தில் உள்ள கடவுள் வாழ்த்துப் படலத்தில் இவ்வாறு பாடுகிருர்.

அமரிலெதிர்த் தோர்களாவி யெமதிசையைத் தேடியோட
வடருமடற் சூரவீ ரவேள்
மமதைகெடச் சாதிந் நீதிமுறைமை தனக்காகவோது
மகலைவதைத் தோரொருமலே
திம்ரபகைப் பானுமேனி கருகிவிடப் பார்வைவியேவு
தெரிமறையிற் கார ணீசனு
ருமறுதிருத் தாளைநாளுமனதி னினைத்தோதுவோர்தம்
முரியதவப் பேறுமீ றுமே

செய்கப்துல் காதிறு நயினுர் ஆலிம் புலவர் அவர்களும் உமறு கத்தாப் (றலி) அவர்களைப் புகழும் பொழுது அவர்களுடைய ஆட்சியிற் பொழுது றூம் சாம் என்னும் ரூமானியப் பேர்ரசுக்குரிய நாடுகள் இஸ்லாத்தின் கொடியின் கீழ்க் கொண்டுவரப்பட்டமை பற்றிக் குறிப்பிடுகிருர். அச் செய்யுள் வருமாறு:

திசைபெறுலோகா திலோகமிசையுறு வேல்வாள்வலாளர்
திறனெடு தாடாழ நாளும் விறலாலே
யிசையொடுமா றூமுசாமு பலபலதேசாதி தேச
மியனெறியே நீதிமேவ வரசாகிப்
பசையுறு போகாதி போகமுள புவிவாழ் வேகலாதபரிவுறு
மேல்வீடுபேறு புனைவார்மெய்
நசையணிவீ றேறுவாகை யுமறெனுமா நாதர்பாத
நனியுள மீதேபராவி நினைவாமே.

அதே ஆசிரியர் தமது திருமணிமாலையில் உள்ள கடவுள் வாழ்த்தில் உமறுகத்தாப் (றலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நெருங்கிய நட்பாளரும் உறவினருமாகிய வர் எனக்குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இச் செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

புவியதனிஞெப்பேது முரையரிய மிக்கான
புகழுடைய சொற்காவலர்
நபியவர்தமக்காக மகவுதவுநட்பாளர்
நனிநியதிநட்டாதிபர்
கவியதனிலெக்காலு மணிநிரைதுதிப்போடு
கதிவழியணித் திருவார்
திவளருபணித்தோளி னுமறிபுனுகத்தாபின் றிருசரண
மெய்ப்போதுவாம்

குத்பு நாயகம் என்னும் காப்பியத்தில் சேகுனப்புலவர் அவர்கள் உமறிப்னுகத்தாப் அவர்களின் வீரத்தையும் ஆற்றலையும் இவ்வாறு கடவுள் வாழ்த்தில் வருணிக்கிறார்.

அமரிடை யெதிர்த்தோர்களகநிலை யறச்சூர
தகைபுரியும் விற்கோலினல்
கமரிய இனக்கோல வரிமறியு மொத்தார்வ
கனநியதிநற் கோலினல்
தமருயிர்கண் மெய்ப்பேறு பெறுநெற்றியனைப்பூவின்
றடவியவரத் தாயினு
ருமறிபுனு கத்தாபினுயர்சரண மெய்ப்போது
முளமுறநினைப் பாமரோ.

திருக்காரணப் புராணத்தில் அதே ஆசிரியர் உமறு கத்தாப் (றலி) அவர்களின் திறமையை வேறுவிதமாக இவ்வாறு வருணிக்கிறார்.

வித்தாயமர்ந் திறைதனிக் காரணம்புனையு
மிக்கார்தருந் துதியினர்
சத்தாகிவெம் புலியுமொத் தானுமொன்றி நிலைதப்பா
திணங் கியுலவ
வித்தாலமுண் டிடுமெண்ணெய்ப் பாலுமிழ்ந்திட
வியற்றுவனை கொண்டமுறையால்
கத்தாவிரும் புமறுகத்தா பருங்கழல சத்தானிதம்
புகழுவாம்.

வண்ணக்களஞ்சியப் புலவர் தமது இராஜநாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் உமறுகத்தாப் (றலி) அவர்கள் சாதனையைக் குறிப்பிடுகிறார். கருபத்துல்லாவில் இருந்த சிலைகளை உடைத்த பெருமை உமறுகத்தாப் அவர்களையே சாரும் என இவ்வாறு ஆசிரியர் அப்பெருந்தகையைப் பாராட்டுகிறார்.

நரபதி யிறைகு பீபு நபியுடன் றெழுத போது
தரமுறைக் கருபத்துல்லா தனிலுறை புத்தை யெல்லாஞ்
சிரசுகீழ் பணித்துத் துள்ளு சீட்டினற் மிசுருரேட்டி
யரசுசெய் யுமறு செம்பொனடியினை முடியில் வைப்பாம்.

உமறு கத்தாப் (றலி) அவர்களின் வீரமும் தீரமும் ஆற்றலும் வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகக் கடவுள் வாழ்த்தில் வருணிக்கப்பட்டுள்ளது. அச்செய்யுள் வருமாறு:

அமருலகி லுற்றேரு நெடுமகிதலத் தோருமரிய
வனுமுனியு மறுவானி
னிமிர்கொடுவிடப் பானம்வர விடவதைப்பேணி
நிறைமகிழ்வி னெடு பருகினேர்
கமழ்புயவலிச் சீரெவ்வுல கினுநிறைத்தா
திகருணை மிகு பெருமையுடையோ
ருமறிபுனுகத் தாபுபத மலர் துதித்தோர் சுளுபயபதி
புகழ் தலைவரே.

அதே பாணியில் வண்ணக்களஞ்சியப் புலவர் தமது தீன் விளக்கத்தில் மானும் புலியும் ஒரே துறையில் நீர் பருகும் முறையில் செங்கோல் செலுத்திய உமறு கத்தாப் (றலி) அவர்களின் சிறப்பியல்புகளை இவ்வாறு வருணிக்கிறார்.

அமரர்துதி செயநீதி யகிலமிசை தழைவாகி
யருணமொரு புலிதானுமே
கமலமலர் செறிவாவி யொருதுறை யினுறுபாணி
கருதியுண வொருகோல் செய்வோர்
தமதுசின மெழுபார்வை பருதிமறை தரவே செய்
தருள்விசையம் விளைவாகினோர்
உமறுபத மலர்நாளு முறுதியோடு நினைவோர்களுயர்
சுவனநகர் வாழ்வரே

(அருணம்—மான்)

குலாம் காதிறு நாவலர் தமது ஆரிபு நாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் உமறு கத்தாப் (றலி) அவர்களின் ஆற்றலையும் அவர்கள் தம் வெற்றியையும் இவ்வாறு பாடுகிறார்.

தமருகத் தோர்டுபறை பலமுழக் கேறுபொரு தயிரியத்
தோடு மிகுமா
சமருகத் தாவிவிடுதுரகதத் தாருலகு தனையிருத் தாகவிறலார்
கமருகத் தீயுதகமிசுறு நெட்டாறுதருகரதலக்காரணமுளா
ருமருகத் தாபினி னிருகம லநற் றுணித முமுள மிசைத்தா
னணிகுவாம்.

பதுறுத்தீன் புலவர் தமது குத்பு நாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் உமறுகத்தாப் (றலி) அவர்களை வருணிக்கும் பொழுது ஓசை நயம் மிக்கதாகவே செய்யுள் யாத்துள்ளார். அச்செய்யுள் வருமாறு:

முட்டா யெதிர்த்தவர்கள் பட்டே துடித்துவிழ
முப்பார் துதித்த துறவே
சிட்டார் மணிச்சுடிகை யற்றோ டறுத்துமுடி
சிற்றுறிற் றத்தி விழவே
கொட்டார் மதக்கரிகள் வித்தாரத் தந்திரிகள்
கொடித்தே ரோடற்று மடியக்
கட்டாண்மை யுற்றகுபிர் விட்டோட வெட்டுமறு
கத்தாப் தமைக்க ருதுவாம்.

அடுத்த மூன்ருவது கலீபாவான உதுமானிப்னு அப்பான் (றலி) அவர்களை எடுத்துக் கொள்வோம். உதுமானிப்னு அப்பான் (றலி) அவர்கள் நபிகள் பெருமானர் (ஸல்) அவர்களின் மருகராகத் திகழ்ந்தவர். திருக்குர்ஆனை ஒன்று திரட்டும் பணியில் முக்கியமாக ஈடுபட்டவர். எல்லோராலும் மெச்சப்பட்டவர். நபிகள் பெருமானரின் இரு புதல்வியரை திருமணம் புரிந்தமையால் 'துன் னூரைன்' என்ற புகழ் பெயரை பெற்றவர். இனி இத்தகைய பெருமை மிக்க உதுமான் இப்னு அப்பான் (றலி) அவர்களைத் தத்தம் கடவுள் வாழ்த்துக்களில் புலவர் வருணித்துள்ள முறைமையைப் பார்ப்போம்.

உமறுப்புலவர் தமது சீறுப் புராணத்தில் இவ்வாறு வருணிக்கிருர்.

விதுமாற வொளிவான வதனுதி நபிநாவில் விளைவா
னதிரு வேதமே
பதிவாக வொருசேக ரமதாக நிலமீது பயிரா கவுரை
தூவினேர்
சதுமாம றையினேர்கள் பெரியோர்கள் சிறியோர்க
டமதாவியெனவாழுவோ
ருதுமானை யொருகாலு மறவாம லிருகாலு முளமீது
நினை வாமரோ.

சேகுனப் புலவர் தமது புதுகுச்சாமில் உதுமானிப்னு அப்பான் (றலி) அவர்களை வருணிக்கும் பொழுது திருக்குர் ஆன் எழுத்துருவிற் செய்யப்பட்டமையையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருப்புதல்விகள் இருவரைத் திருமணம் முடித்தமையையும் குறிப்பிட்டு இவ்வாறு பாடுகிருர்:

தெரிவாருளமதிலுய்த்தாய் பொருள்களு நினைவாயெழுமொரு
மிப்பாகியவழி தெளிவாயுணர்பெற நற்காரணனெடு
மருள்வாணின்

வருவாய்நிரைநிரை சொற்சீரணியொடு மெழுவாய்ப்பணிலை
பெற்றதியின்மொழி வழியாயுரைசெய மிக்கா
மறிவுள வியலார்சீர்
குருவாகியநபி தற்காதலினருண் மகளாரிருவரை
நட்பாய்தொடைபுனை
குணவாருதிபொறை யிற்பூவலயமு நிகராவண்
டருவாய் நிழல்புரி தற்காதரவுள வுதுமானெனுமிசை
யிற்காவலர்திரு தகைசேர்பதமல ரைப்பேணுதுநித
நிதநாமே.

சேகுனைப் புலவரின் திருமணி மாலை கடவுள் வாழ்த்தில் உள்ள 12 ஆம் செய்யுளிலும் குத்பு நாயகக் கடவுள் வாழ்த்து 15 ஆம் செய்யுளிலும் திருக்காரணப் புராணத்தின் கடவுள் வாழ்த்தில் உள்ள 12 ஆம் செய்யுளிலும் உதுமான் இப்னு அப்பானின் புகழ் பாடப்பட்டுள்ளது. வண்ணக் களஞ்சியப் புலவரும் தமது இராஜநாயக கடவுள் வாழ்த்தில் உள்ள 11 ஆம் செய்யுளிலும் குத்பு நாயக கடவுள் வாழ்த்து 11 ஆம் செய்யுளிலும் தீன்விளக்கக் கடவுள் வாழ்த்தில் உள்ள 7 ஆம் செய்யுளிலும் உதுமான் இப்னு அப்பான் (றலி) அவர்களின் சிறப்பை எடுத்தோதியுள்ளார். ஆரிபு நாயகக் கடவுள் வாழ்த்தில் உள்ள 9 ஆம் செய்யுளிலும் உதுமான் (றலி) அவர்களின் புகழ் பாடப்பட்டுள்ளது.

பதுறுதீன் புலவரும் தமது முகியித்தீன் புராணக் கடவுள் வாழ்த்தில் சுருக்கமாக உதுமான் (றலி) அவர்களை இவ்வாறு பாடுகிறார்:

நபிநாயக நயினரஹ் மதனூர்திரு மகளார்
செவிதாயிரு மயிலார்தமைத் திருமாமண முகர்வோர்
புவிமீதினின் மஹ்மூதுரை புறுக்காணுரை தெரிவோர்
த,பிமானம் உடையோருது மானைப்புகல் வாமே.

காப்பியம் இயற்றிய பாவலர் அனைவரும் ஒன்று கூடி ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தியுள்ளனர் போன்று தோன்றுகிறது. அந்தக்கூட்டத்தில் நான்காவது கலீபாவாக பெருமானார் பெருமருகரும் சிறுவர்களுள் முதன் முதல் இஸ்லாத்தைப் பின்பற்றியவருமாகிய அலி இப்னு அபீதாலிப் (றலி) அவர்களைக் கடவுள் வாழ்த்தில் எவ்வாறு வருணித்தல் வேண்டும் என்று ஆலோசனை நடத்தி இருக்க வேண்டும். என்பது போல் தென்படுகிறது. அலி (றலி) அவர்களின் வீர தீர பராக்கிரமச் செயல்களை எவ்வாறு வருணிக்க வேண்டும் என்று அந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஏக மனதாக முடிவுசெய்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இத்தகைய சந்தேகங்கள் தோன்றுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. காப்பிய ஆசிரியர்களான பாவலர் அனைவரும் ஒரே பாணியில் அலி (றலி) அவர்களின் புகழைப் பாடியுள்ளனர். ஓசை நயம் மிக்க செய்யுள்களாலே எல்லாப் பாலவர்களும் அலி (றலி) அவர்களின் புகழைப் பாடியுள்ளனர். இனி அந்தச் செய்யுள்கள் அவ்வாறு ஒரே நடையில் அமைந்துள்ளனவா என்பதைப் பார்ப்போம்.

முதலில் சீறாப் புராணத்தை எடுத்துக் கொள்வோம். உமறுப் புலவர் தமது கடவுள் வாழ்த்தில் அலி (றலி) அவர்களை எவ்வாறு புகழ்ந்திருக்கிறார் என்பதைப் பார்ப்போம். ஓசைநயமுள்ள பாடல்களுக்கு ஒப்பற்ற மகுடமாக அமைந்துள்ள அச்செய்யுள் வருமாறு.

படிகிடு கிடென நாகமுடிநெறு நெறெென வாரி
பபடுதிரை யளற தாகவே
வடவரை யசைய வானமு கடுடைபட வருத
மழைமுகில் சிதறி யோடவே
யடையலர் கெடிகள் கோடியிடிபடு படலதூளி
யலரியி னுடலின் மூழ்கவே
நடமிடு கடினவாசி மிசைவரு சமரசூர
நரர்புலி யலியை யோதுவோம்.

சேகுனப்புலவரும் உமறுப்புலவரை விடச் சலித்தவரல்லர். அவரும் புதுகுச்சாமில் உள்ள கடவுள் வாழ்த்தில் ஓசை நயம் மிக்க ஒரு செய்யுளில் அலி (றலி) அவர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். உமறுப் புலவரின் பாடலில் உள்ளது போலவே சேகுனைப் புலவரின் புதுகுச்சாம் கடவுள் வாழ்த்திலும் டகரஓசை சிறப்பாக அமைந்துள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. இனிச் செய்யுளைப் படிப்போம்.

தண்டிரைக்குரைகடற் புனலறத்தந்திகட் டிசைதிசை
பெயர்தரத்
தங்குபொற்கிரிமிகத் தளர்வுறக்கன மீது
கொண்டவற்றுருமுரசட் கதறிடத்துன் றுநற் கணமினத்து
திர்தரக்
கொந்தழற்கதிர்மதிக் கலைவுறத் தொனியோடு
மண்டர்கட்கொடிகுடைப் பொருபடைத்தண்டநிர்த்
துகள் படக்களமகத்
தண்டியெட்டொடுபதிற் றியநடைக்கதிமாவின்
றிண்புறற்சமரிடைத் தொழில்வயத் தொண்படைப் புலியலிக்
கழலெழிற்
சிந்தையிற் புகழ்பெறத் துதிபெறப் புகல்வாமே.

இத்தகைய செய்யுட்களைப் படிக்கும் பொழுது வீர உணர்ச்சி இங்கு கரைபுரண்டோடுவதைக் காணலாம். நாமும் போர்க்களம் நோக்கிச் செல்கின்றேமோ என்னும் எண்ணமும் ஏற்பட இடமுண்டு. அடுத்து சேகுனப்புலவர் தமது திருமணிமாலையில் உள்ள கடவுள் வாழ்த்திலும் வீராவேசம் பொருந்திய அலி (றலி) அவர்களை வீரமே பொருந்திய உருவெடுத்தவர் போன்று அமைக்கிறுர். அச்செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

திசைபல வதிர்தர மலைநிலைபெயர்தர செறியலை சுவறிடவே
விசைதரு பணிலமு மெரிகதிர் தழல்புவி விரையிடி யவையலற
வசையுறு மடையலர் பதிகுலைகுலைவுற வருநெறி துரகதமே
லிசைதர நடமிடு மலிபுலி யலர்துணை யிருபத மதுகதியே.

திருக்காரணப்புராணத்தில் சேகுனாப்புலவர் கடவுள் வாழ்த்தில் அதே பாணியைப் பின் பற்றி அலி (றலி) அவர்களை இவ்வாறு வருணிக்கிறார்.

திரைகடல்சுவறிட நெடுவரைபொடிபட வெழுபுவிதி
டனுலைய
விரைகதிர் மதிதளர் தரவுடுவுதிர் தர வெகுளியினொளியதிரா
விரைபுயன் மெலிதர வடையலருயிரொடு மெழிவரி
வையர் மணியின்
சரடவிழ்தரநட மிடுவயதுரகத சயஅலிபத மணிவாம்.

வண்ணக்களஞ்சியப் புலவர் தமது இராஜநாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் அலி (றலி) அவர்களை வருணிக்கும் பொழுது அலி (றலி) அவர்களின் குதிரையான துலுதுலைக் குறிப்பிடுகிறார். தீர உணர்ச்சிபொங்க, ஓசைநயம் சிறப் புற்றோங்க, டகர எழுத்து ஓசைநயத்தை அதிகரிக்கு முக மாக இடம் பெற்றுப் பின் வருமாறு ஒரு செய்யுள் உள்ளது.

நடைநடமிடுதுலு துலின்வரு விசையினி னரர்புவி
சுமை கொளுமோர்
விடையுடல் குழைதர வலைகடல் சுவறிட மிகுசணமுதிர்தரவே
கடையுகமுடிவதி ரெனமுதிர் திசைமதகரிகளு மலறிடவே
யடையலர் முடிபொடிபடவிடறியபுலி யலியிரு பதநினைவாம்

வண்ணக்களஞ்சியப் புலவர் தமது தீன் விளக்கத்தில் ஏனைய காப்பிய ஆசிரியர்களைப் பின்பற்றி 'சுவறிட' என்னும் சொற்றொடரைக் கடவுள் வாழ்த்தில் உபயோகிக்கிறார். கடல் வற்றுதலையே சுவறுதல் என்பர். தீன் விளக்கக் கடவுள் வாழ்த்தில் அலி (றலி) அவர்கள் இவ்வாறு புகழப்பட்டுள்ளார்.

வடவரையொடு பலவரைகளு மசைதரவலை தடுகடல்சுவறப்
படர்தருமெழுமுகில் கதரிடவொளி பரவியசணமுதிர்தரவே
விடையுடல் குழைதர வதுசுமைகொள நிலவியபுவியர்தரவே
யடையலர் முடிபொடி படநடமிடுபரி யலியிடு பதநினைவாம்.

குலாம் காதிறு நாவலரும் தமது ஆரிபு நாயகத்திலுள்ள கடவுள் வாழ்த்தில் சொல்லாட்சி, பொருட்செறிவு, வீர உணர்ச்சி, ஓசைநயம் ததும்ப அலி (றலி) அவர்களைப் புகழ்ந்துள்ளார். இருபத்தைந்து டகர வர்க்க எழுத்துக்கள் இருபத்து நான்கு சீர்களைக் கொண்ட இச்செய்யுளில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இனிச் செய்யுளைப் பார்ப்போம்.

கடிவிட வ்ரவுட னெரிபட விடுமத கரியுட னுதரிடவே
படகக னெடுதிகை கிடுகிடு வெனவெதிர் பகையவர்
பொடிபடவே
கொடிகுடை முடியடி தலையுட லிவைகுல வுவைசொடு
குவிதரவே
ய்டியொடு பொரநட மிடுகுர கதரலியெழிலடி முடி புனைவாம்

ஈழத்து பதுறுதீன் புலவரும் இத்துறையில் சற்றும் சலித்த வராகத் தென்படவில்லை. இவரும் டகர வர்க்க எழுத்துக்களைப் பெரும்பாலும் டகர ஒற்றெழுத்துக்களை ஓசைநயத்தின் உச்ச நிலையை அடைய வீர உணர்ச்சி பொங்கி வழிய அலி (றலி) அவர்களைத் தமது முகியித்தீன் புராணத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில் அமைத்துப் பாடியுள்ளார். அச் செய்யுள் வருமாறு:

அட்டகிரி யட்டகஜ மட்டநா கங்களோ
டனந்தனு மயங்கி விடவே
கொட்டமிடு மத்தகரி துட்டமகு டத்தரசர்
கொற்றமு மடிந்து விடவே
வட்டமிடு மெய்ப்புரவி துல்துல்வடி வாள்கொடுறு
வன்குபி ரறுத்த திறலோர்
நெட்டநெடி யோனறுசி டத்தினிலு தித்தபுலி
நீண்மலர்ப் பதம்ப ணிகுவாம்.

ஏனைய காப்பிய ஆசிரியர்கள் விரிவாகக் கூறியவற்றைச் சின்ன சீறு ஆசிரியர் பனீ அகுமது மரைக்காயரும்

நாகூர்ப்புராண ஆசிரியர் குலாம் காதிறு நாவலரும் சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார். குலாம் காதிறு நாவலர் தமது ஆரிபு நாயகத்தில் ஏனைய காப்பிய ஆசிரியர்களைப் பின் பற்றி எல்லோரையும் விரிவாகப் புகழ்கிறார்.

ஆலசுகாபிகள், தாபியீன்கள், தபஉத்தாபியீன்கள், இமாம்கள், முகியித்தீன் ஆண்டவர், வலிமார் ஆகிய அனை வரையும் சின்ன சீறு ஆசிரியர் ஒருசெய்யுளிலே அமைத்துப் பாடியுள்ளார். நபிகள் பெருமானாரின் அசுஹாபித் தோழர் களுடன் தொடர்பு கொண்டவர்களைத் தாபியீன்கள் என் றும் தாபியீன்களோடு தொடர்பு கொண்டவர்களைத் தப உத்தாபியீன்கள் என்றும் வழங்கப்படும். இவர்கள் அனை வரும் ஒருங்கே அமைந்த சின்ன சீறு கடவுள் வாழ்த்து இவ் வாறு உள்ளது:

அருமறை நபியுல் லாதம் மாலசு காபிமாரைத்
தரும மார்தா பியீனைத் தாபியித் தாபியீனைக்
கருணை சேரி மாங்க டம்மைக் கவுதுமுகியித்தீனைப்
பொருவி லானௌலி மார்தம் மைப்புந் தியிற்கரு துவாமே.

குலாம் காதிறு நாவலரோ தமது நாகூர்ப்புராணத்தில் 'நான்கு யார்கள்' என அழைக்கப்படும் இஸ்லாத்தின் முதல் நான்கு கலீபாக்களையும் ஒரே செய்யுளில் வருணிக்கிறார். அச்செய்யுள் பின் வருமாறு அமைந்துள்ளது.

வீங்குபுகழ் பெறுநபிமார் வேந்தர்விழை நண்பினரூண்
மிக்கஓன் றும்
வாங்குசிலை யிருங்கரத்து மன்னர்திருப ணி முடிதோய
வடுக்கள் பூத்த
வோங்குதிறல பூபக்கரு மறுதுமா னலியின்னே
ரொளிர் பூந்தாட்க
டாங்குசிர மெனதென்று தம்மடியார் தமிலிசலுந்
தமியேம் யாமே.

குலாம் காதிறு நாவலர் தமது நாகூர் புராணக் கடவுள் வாழ்த்தில் ஹஸன் (றலி), ஹுஸைன் (றலி) அஸ்ஹாபிகள் உம்மஹாத்துல் மூமினின், பாத்திமா (றலி) நான்கு இமாம்கள் முகியித்தீன் ஆண்டவர், றிபாய் ஆண்டவர், நாகூர் ஆண்டவர், திரிசிரபுர மலைபாலம் வேந்தர் என்று இன்னோரன்ன பலரைப் புகழ்கிறார்.

சீறாப் புராணக் கடவுள் வாழ்த்தில் சிறப்பாக இடம் பெறுபவர் ஸதகதுல்லா அப்பா என்னும் செய்கு ஸகதுல்லா வொலி அவர்களேயாவர். இவர் சிறப்பாகப்பாடப் படுகிறார். சீறாப் புராணம் பாடுவதற்கு நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களைப்பற்றிய விவரங்களை உமறுப்புலவருக்கு அளித்தவர் செய்கு ஸதகதுல்லா ஆலிம் அப்பா வாகையினால் அப்பெரியாரை உமறுப்புலவர் புகழ்ந்துள்ளார். அச்செய்யுள் இவ்வாறு அமைந்துள்ளது.

நம்மையாளுடையான் வேதநபிதிரு வசனந் தினோர்
சம்மதித்திடப்பா ரெல்லாந் தழைக்கவே விளக்கஞ் செய்
தோழ
ரிம்மையு மறுமையும்பே றிலங்கிய ஸதக்கத்துல்லா
செம்மல ரடியி ரண்டுஞ் சிந்தையி லிருத்தினேனே.

புலவர் நாயகமும் தமது புதுகுச்சாம் என்னும் காப்பியத்திலும் திருமணிமாலை என்னுங் காப்பியத்திலும் செய்கு ஸதகத்துல்லா அவர்களைக் கடவுள் வாழ்த்தில் இடம் பெறச் செய்கிறார். ஸதகத்துல்லா அப்பாவைக் குறிப்பிடும் பொழுது வகுதையை இருப்பிடமாகக் கொண்டவர் என்று குறிப்பிடுகிறார். காயல்பட்டணம் காஹிறு (கெய்ரோ) எனப்படுவது போன்று கீழக்கரை வகுதை (பகுதாது) எனப் படுகிறது என்பர்.

மலமொரு மூன்றுங் காய்ந்து வருவழி யைந்தும் போக்கி.
நிலனொ ராறுற் றினே றிநிரும லனென்ன வாழும்
பலபுகழ் வகுதை மேன்மைப் பதியினிற் பதியா நின்று
புலனுகர் சதக்கத் துல்லாப் பொற்கழல் போற்றல் செய்
வோம்

புலவர் நாயகத்தின் திருமணிமாலையில் உள்ள கடவுள் வாழ்த்திலும் சதக்கத்துல்லா அப்பா அவர்கள் புகழப்பட்டுள்ளார்கள். ஏறத்தாழ அதேகருத்துக்களையே இச்செய்யுளிலும் காணலாம். அச்செய்யுள் வருமாறு:

விரிதரு மறையின் வாரி மனநெடு மேகம் புக்கிப்
புரிதருந் தெளிவி னோடும் போதரப் பருகிச் செந்தேன்
சொரிதருந் திருவாய் வள்ளற்றுதிதரும் வகுதை மேவிப்
பெரிதருஞ் சதக்கத் துல்லா பிறங்கணி பதமுட் கொள்வாம்.

வண்ணக்களஞ்சியப்புலவரின் இராஜநாயகத்திலும் தீன் விளக்கத்திலும் செய்கு சதக்கத்துல்லா அவர்கள் கடவுள் வாழ்த்தில் இடம் பெற்றுள்ளார். இராஜ நாயகத்தில் உள்ள கடவுள் வாழ்த்தில்

மதிதவழ் மணிமுடி மாட மக்கமா
பதியினிற் றெழுதன்றே வகுதைப் பால்வரு
துதியொலி சதக்கத் துல்லாப் பதப்புகழ்
நிதிமனப் பேழையி னீறைத்துப் போற்றுவாம்.

என்றும் தீன் விளக்கத்துக் கடவுள் வாழ்த்தில்

பூதலத் தினிலஞ்ஞானப் புரையகன் றுளிர்வதாக
வேதமெய்ப் பொருளை யெல்லாம் விளக்கியே தழைக்கச் செய்தோர்
மேதரு நறஜாத் தோங்கி வியன்பெறும் சதக்கத் துல்லா
பாதபங்கயங்க ளேத்திப் பரிவொடுஞ் சிகரங் கொள்வோம்.

என்றும் சதக்கத்துல்லா அப்பா அவர்கள் பாடப்பட்டுள்ளார்.

குலாம் காதிரு நாவலர் கூட செய்கு சதக்கத்துல்லா அவர்களை வருணிக்கத் தவறவில்லை. நாவலர் தமது ஆரிபு நாயகத்தில் உள்ள கடவுள் வாழத்தில்

பொல்லா தபொடித் தழியா தபடி
நல்லா தநயத் தினநண் ணுறவே
யெல்லா ருமிணக் கமுறுஞ் சதகத்
துல்லா வடிதொட் டுவழுத்து துமால்.

என்று வருணிக்கிருர்.

இமாம் சாபி (றஹ்), இமாம் றனபி (றஹ்), இமாம் மாலிக்கி (றஹ்), இமாம் றன்பலி (றஹ்) ஆகிய நால்வருக்கும் எல்லாக் காப்பிய ஆசிரியர்களும் தத்தம் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் ஒரு தனி இடம் அளித்துள்ளனர். ஈழத்திலே பதுறுத்தீன் புலவர் அவர்கள் இயற்றிய முகியித்தீன் புராணக் கடவுள் வாழ்த்தில் இடம் பெற்றுள்ள நான்கு இமாம்களேயும் நோக்குவாம்:

இல்மெனுங் கடலே மனமுகி றேக்கி
யியலறி வமுதெனப் பொழிய
வல்வினே யகல மனுப்பயிர் தழைக்க
மருவிய வுலகெலாம் பயிலக்
கொல்வினே பொருத்துங் குபிர்க்குல மறுத்த
குருநபி மறையினேப் பெருக்கி
நல்வினே பயிற்று நாலி மாம்களேயும்
நாவினலனு தினம் புகல்வாம்.

இவ்வாறே கூறிக்கொண்டே போகலாம்.

Printed at

ALBION PRESS (Colombo) LTD.

157, Jayantha Weerasekera Mawatha,

Colombo-10.

Sri Lanka.